

உ
சிவமயம்

அமரர்

# சுப்பிரமணியம் இரத்தினசிங்கம்

அவர்கள்

இறைவனடி சேர்ந்தமையை எடுத்தியம்பும்

# இரத்தின மலர்

27.10.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அமரர்

# சுப்பிரமணியம் இரத்தினசிங்கம்

(Architect, Engineer, Justice of peace (whole Island)
District Director,
Human Rights Organization of the Justice of peace - Sri Lanka)

அவர்கள்

இறைவனடி சேர்ந்தமையை எடுத்தியம்பும்

# இரத்தின மலர்

27.10.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# இரத்தின மலர்



அன்னையின் மடியில்
09.02.1935

இறைவன் அடியில்
28.09.2016

## அமரர்
# சுப்பிரமணியம் இரத்தினசிங்கம்


அவர்களின்

## திதி வெண்பா

துர்முகி வருடம் தன்னை மருவு புரட்டாதி திங்கள்
எண்ணி பன்னிரெண்டாம் நாளில் எமதிறை இரத்தினசிங்கம் – ஈண்டு புகழ்
தன்னிறை திரயோதசி திதி தன்னை தாங்கி தேய்பிறை கூட
கண்ணிலால் கலங்கச்சென்றார் ஐங்கரத்தான் அடிக்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னையின் மடியில்
15.02.1911


இறைவன் அடியில்
25.08.1990

# அமரர் செல்லப்பா சுப்பிரமணியம்

(இளைப்பாறிய சிறைச்சாலை களஞ்சியப் பொறுப்பாளரும்,
பாண்டியன்தாழ்வு அருள்மிகு நரசிம்ம ஞானவைரவர் ஆலய தர்மகர்த்தாவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்னையின் மடியில்
28-08-1917

இறைவன் அடியில்
21-08-2007

# அமரர் இரத்தினம் சுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இறைவன் அடியில்

28.02.1984

அமரர்

# திருமதி கண்ணம்மா இளையதம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னையின் மடியில்
15.10.1969

இறைவன் அடியில்
04.09.2008

# அமரர் இரத்தினசிங்கம் கிரிதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலரான்
நோக்குண்டாம் மேனி நுடங்காது -பூக்கொண்டு
துப்பார் "திருமேனித் தும்பிக்கையான்" பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

## தேவாரம்

குனித்த புருவமுங், கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்,
பனித்த சடையும், பவளம் போல் மேனியிற் பால் வெண்நீறும்,
இனித்த முடைய வெடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனி(த்)தப் பிறவியும் வேண்டுவதே, இந்த மா நிலத்தே

## திருவாசகம்

முத்தி நெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட
அத்தனென அருளியவாறார் பெறுவார் அச்சோவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண் டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

அகரமு மாகி யதிபனு மாகி யதிகமு மாகி அகமாகி
அயனென வாகி அரியென வாகி அரனென வாகி அவர்மேலாய்
இகரமு மாகி யெவைகளு மாகி யினிமையு மாகி வருவோனே
இருநில மீதி லெளியனும் வாழ எனதுமு னோடி வரவேணும்
மகபதி யாகி மருவும் வலாரி மகிழ்களி கூரும் வடிவோனே
வனமுறை வேட னருளிய பூஜை மகிழ்கதிர் காம முடையோனே
செககண சேகு தகுதிமி தோதி திமியென ஆடு மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை மலைமிசை மேவு பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

திருச்சிற்றம்பலம்

**"எல்லோரும் இன்புற்று வாழ்க**
**என்றும் நன்மை நிலவுவதாக"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவையின் போது

## திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாள்என் னேயென்னே
ஈதேஎந் தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோ ரெம்பாவாய்.

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன்ஆ னந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய்.

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய்.

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்.

அன்னே இவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய்.

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எம்கணவ ராவார் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய்.

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடீ செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடுந்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தம் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய்.

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருள்ஆ மாபாடிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய்.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவணமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.

செங்கண வன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகம்
# திருவாசகச் சிறப்பு



திருச்சிற்றம்பலம்

தொல்லையிரும் பிறவிச் சூழுந்தளை நீங்கி
அல்ல லறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தனடிவெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க!
கரம் குவிவார் உண்மகிழுங் கோன் கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!

ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம்தேவன் அடி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி
விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கு ஒளியாய்
எண் இறந்து எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றென்றறியேன்

புல்ஆகி பூடு ஆகி புழு வாய் மரம் ஆகி
பல் விருகம் ஆகி பறவை யாய் பாம்பு ஆகி
கல்லாய் மனிதர் ராய் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவர் ஆய் தேவர் ஆய்
செல்லா அ நின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்தி ளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!

வெய்யாய் தணியாய் இயமான நாம் விமலா
பொய் யாயின எல்லாம் போய கல வந்து அருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந்தன்னை அகல்விக்கும் நல் அறிவே

ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே!
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்த தபால்கன்னலொடு நெய் கலந்தால் போலச்
சிறந்து அடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓரைந்து உடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங் கயிற்றால் கட்டி
புறம் தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி
மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந் துள்ளுருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்!

தாயிற் சிறந்த தயா வான தத்துவனே!
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே!
தேசனே தேனாரமுதே சிவபுரனே!
பாசமாம் பற்று அறுத்து பாரிக்கும் ஆரியனே!
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்

பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெருமானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என்னாரியுராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன் இருளே தோன்றாப் பெருமையனே!
ஆதியனே அந்தம் நடு ஆகி அல்லானெ
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார்தங்கருத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கு அரிய நோக்கே நுணுக்கு அரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வு இல்லாப்புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண் பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்து இருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப் பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நடம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேதார கௌரி காப்பு



## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின்றருள் செய் எலிவாகனப் பிள்ளாய்
சொற்குற்றமொடு பொருட் குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற் கா.

காப்பெடுக்க வந்தேனே கௌரி அம்பாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக்கு உயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தரமுகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகிஷாசுரனை கூறுபோட்டவளே
அசுரர்குணம் யாவும் அழிக்கும் சுடர்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா உமை அணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாக காட்டிடுவீர்
நெறியறியாது திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளுந் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை யற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதித் தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தித் தாயவளே
ஏட்டுடைத் தேவியளே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளி மகாதேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பியணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரி அம்மா
காப்புக்கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோல் கழன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து
பக்திமனதுடனே பரவி அணிவோர்க்கு
சித்தியெலாம் தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத் திலோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி யெல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரி காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்து வரமுன்வினைகள் நீங்கிவிட
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

"அம்பிகையை சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்



சீதக் களபச்செந்தா மரைப்பூம்

பாதச் சிலம்பு பலஇசை பாடப்

பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்

வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்

பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விழங்குசிந் தூரமும்

அஞ்சு கரமும் அங்குச பாசமும்

நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்

நான்ற வாயும் நாலிரு புயமும்

மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியுந்

திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்

சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான

அற்புதனீன்ற கற்பகக் களிறே

முப்பழும் நுகரும் மூஷிக வாஹன

இப்பொழுதென்னை யாட்கொளவேண்டி

தாயா யெனக்குத் தானெழுந் தருளி

மாயாப் பிறவி மயக்கம் மறுத்து

திருந்திய முதயைந் தெழுத்துந் தெளிவாய்ப்

பொருந்தவே வந்தென் னுளந்தனிற்புகுந்து

குருவடி வாகிக் குவலயத் தன்னில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடாவகைதான் மகிழ்ந்தெனக்கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டாவுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினையறிவித்து
திருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்து
கடையிற் சுழிமுனை காபலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்தி
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தனியக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முக மாக இனிதெனக் கருளி
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்தித்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கிய எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியின்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்து அருள்வழி காட்டி
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்தி
கூடுமெய்த் தொண்டர் குழத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்து
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

(விநாயகர் அகவல் முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்த ஷஷ்டியின் போது

ஓம் சரவணபவ! ஓம் சரவணபவ! ஓம் சரவணபவ!

## கந்த சஷ்டி கவசம்



**குறள் வெண்பா**

அமரர் இடர்தீர அமரம் புரிந்த குமரன்
அடி நெஞ்சே குறி.

**நேரிசை வெண்பா**

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்(து) ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந்தனை.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பண்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர்குடி கெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசஅங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்பூஷணமும் பதக்கமும் தரித்து
நன் மணிபூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செககண
மொகமொக மொகமொக மொகமொக மொகன
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழி செவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமி ரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வல்வேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும்எனை எதிர்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடுவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியும் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன் திருநாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் ரட்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டிக் கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறனிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்க ருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அட்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொ
லோசக மேழுமளித்து
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் துறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்து நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக்
கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாய்
விண்கண்ட தெய்வம்பல் கோடி
யுண்டேனும் விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவ நாமாவளி

பரசிவநிந்தைசெய் பிரமனையுந்தலை
பாற அறுத்தவரே

பக்தர்களுக்குயர் சித்தியளித்தருள்
பண்பொடு செய்பவரே

மங்கலவைரவ புங்குவமங்கல
மங்கலம்வாழி மக்கலம்வாழி
பிரமனகந்தை நீக்கியசாமி
பித்தற்கருள் புரிதரவேணும்

சைந்தொடையுடையீர் முறுவற்படையீர்
தெய்விகசூலமும் கையிற்கொண்டு

வைரவசுவாமி யடியேம்வல்வினை
வல்விரைந்தோடவே யருள்வாயருள்வாய்

அருள்வாய்அருள்வாய் அருள்வாய்அருள்வாய்
அருள்வாய்அருள்வாய் அருள்வாய்அருள்வாய்

அருள்வாய் அருள்வாய் அருள்வாய்
ஆனந்தந்தந்தருள்வாய் அருள்வாய்

ஆனந்தம்ப்ர மானந்தம்ப்ர
மானந்தம்ப்ர மானந்தம்

ஞமலியின்மேலாய் நமையருள்கோலாய்
ஞப்போருடையாய் நமநமசரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாய் ராம்


## முன்னுரை

அன்பு உள்ளமும் கருணையும் கொண்ட ஸ்ரீ ஷீர்டி சாயிபாபாவின் ஆரத்தியைப் பிழையின்றியும், தங்கு தடையின்றியும் ஒவ்வொரு வேளையும் இப்புத்தகத்தை பார்த்து நாம் பாடும் பொழுது தொடர்ச்சியாக வரும்படி பகவான் ஸ்ரீ ஷீரடி சாயிபாபா நமக்கு அமைத்துக் கொடுத்துள்ளார்கள்.

ஸ்ரீ ஷீர்டி சாயிபாபாவின் மகிமைகளை வெளிப்படுத்தம் இறைப்பணியில் அடியேனைக் கருவியாக்கிக் கொண்டதற்கு அவருடைய பொற்பாத கமலங்களுக்கு என்னுடைய பணிவான நமஸ்காரங்கள்.

இந்த ஆரத்தியை போற்றி பாடி அனைவரும் ஸ்ரீ ஷீர்டி சாயிபாபாவின் அருளை பெற்று வாழ்க்கையில் உயருமாறு வேண்டுகின்றேன்.

என்றும் சாய் சேவையில்
சாய் பக்தன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ ஷீர்டி சாயி பாபாவின் மூல மந்திரம்

ஓம் சாயி ஸ்ரீ சாயி ஜெய ஜெய சாயி

**ஸ்ரீ சாயிநாதர் திருவடி**

சாயி நாதர் திருவடியே
ஸம்பத் தளிக்கும் திருவடியே
நேயம் மிகுந்த திருவடியே
நினைத்த தளிக்கும் திருவடியே
தெய்வ பாபா திருவடியே
தீரம் அளிக்கும் திருவடியே
உய்யும் ஞானத் திருவடியே
உயர்வை யளிக்கும் திருவடியே

**ஸ்ரீ ஷீர்டி சாயி பாபாவின் காயத்ரி**

ஓம் சாயிநாதய வித்மஹே
ஷீர்டி வாசயாய தீமஹி
தந்நோ சாயி ப்ரசோதயாத்
தந்நோ சாயி ப்ரசோதயாத்

**ஸ்ரீ ஷீர்டி சாயி பாபாவின் த்யான ஸ்லோகம்**

பத்ரி க்ராம ஸமத் புதம்
த்வாரகா மாயீ வாசினம்
பக்தா பீஷ்டம் இதம் தேவம்
ஸாயி நாதம் நமாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷீர்டி சாயிபாபாவின் வரலாறு

ஸ்ரீசாயிநாதர் எப்போதும் வேப்ப மரத்தடியில் வாசம் செய்து கொண்டு பக்தர்களுடைய பிரார்த்தனைகளுக்கு செவிசாய்த்து கற்பக விருட்சத்தைவிட அதிகமான அருளை வாரி வழங்குபவர். சற்குரு ஸ்ரீசாயிராம் எல்லா பக்தர் களுக்கும் நலம்தரக் கூடிய யாவற்றையும் அளிக்கும் தெய்வம்.

ஒருவர் சாயி பாபாவின் பக்தராக வேண்டுமென்றால் அது அவருடைய அருள் ஒன்றினாலதான் முடியும். பாபாவின் உண்மையான பக்தன் ஆகிவிட்டால் அவனுக்கு தேவைகள் என்பதே இருக்காது. ஏனென்றால் அவனுக்கு வேண்டிய யாவற்றையும் முன்கூட்டியே பாபா அளித்து விடுகிறார்.

ஸ்ரீசாயிபாபா பிராமண குடியில் பிறந்து முஸ்லீம் ஒருவரால் சில வருடங்கள் வளர்க்கப்பட்டு பின்னர் கோபாலராவ் தேஷ்முக் என்ற ஜமீன்தாரிடம் ஒப்படைக்கப்பட்டதாக கூறுகிறார்கள். 1872ம் ஆண்டு ஒரு நாள் தூபகேடா என்ற கிராமத்திலிருந்து சுமார் 17 அல்லது 18 வயது நிரம்பிய வாலிபராக மராட்டிய மாநிலத்திலுள்ள ஷீரடிக்கு சந்தபாய் படேல் என்பவரின் உறவினர் திருமண ஊர்வலத்துடன் ஒருவராக வந்தார்.

பாபா தங்குவதற்கு கந்தோபா என்ற ஆலயத்தை ஏற்ற இடமாக கருதினார். கந்தோபா என்பது வீரபத்திர சுவாமியாகும். இந்த ஆலயத்தை பூஜை செய்தவர் மஹல்சாபதி இவரே பாபாவின் பக்தர்களில் முதன்மையானவர். ஒருமுறை பாபாவை பாபாசாயி என்று அழைக்க அன்றுமுதல் பாபாவிற்கு சாயிபாபா என்று பெயர் வந்தது. வாழ்நாள் இறுதிவரை ஷீரடியிலே பாபா இருந்தார்.

கோபால்ராவ் தேஷ்முக் என்பவரை குருவாக ஏற்றுக்கொண்டு குருவிடம் மிகுந்த பக்தியும் அன்பும் கொண்டு குருசேவையை சிறந்த சாதனையாக செய்தார். இதனால் சிலருக்கு பொறாமை ஏற்பட்டு கல்லால் பாபாவை அடிக்க இரத்தம் வந்தது. பின்பு மற்றொரு கல்லால் அடிக்கும் போது பாபாவின் குருவந்து தம் தலையில் தாங்கினார். இதனால் மனம் வருத்தமடைந்த பாபா நான் தனியாக செல்கிறேன் என்று கேட்க உடனே குருதம் சக்தி முழுவதும் உனக்கு தருகிறேன் என்று கூறினார்.

அருகில் இருந்த பசுவிடம் பால் கறந்து வருமாறு பாபாவிடம் கூற அவரும் அந்த மாட்டின் உரிமையாளரை கேட்டபோது இந்த மாடு மலடு என்றார். உடனே பாபா அவனையும் பசுவையும் தம் குருநாதரிடம் அழைத்து வந்து விபரம் சொல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனே அவர் பசுவின் மடியை தடவி பிறகு பால் கறக்க மாட்டுக்காரனிடம் சொல்ல அவன் பால் கறக்க ஆரம்பித்த உடனே பால் பெருக்கெடுத்து வந்தது. உடனே தம் சக்தி முழுவதையும் பாபாவிற்கு தந்தார். பாபாவை கல்லால் அடித்தவன் பிணமாக வீழ்ந்தான். அங்கிருந்தவர்கள் அவனை மன்னிக்க வேண்ட இனி என்னால் முடியாது பாபாவால்தான் முடியும் என்று குரு சொல்லிவிட்டார். உடனே பாபா குருவின் பாததுளியை எடுத்து பிணமாக கிடந்தவன் மேல் தூவ அவன் உயிர் பெற்று எழுந்தான். பின்பு அவனோடு சேர்ந்தவர்களையும் மன்னித்துவிட்டார்.

பாபா பெரும்பாலும் தியானத்தில் மூழ்கியிருப்பார். கபீர்தாசர் போன்ற மகான்களின் பாடல்களை பாடி நடனம் ஆடுவார். ஷீரடியில் உள்ளவர்கள் பாபாவை பித்தன் என்று நினைத்தார்கள். ஆனால் பாபா மூலிகை மருந்து மூலம் பாம்பு கடிக்கும் நிவாரணம் செய்து பாம்பின் விஷத்தை உபயோகம் செய்து குஷ்டரோகத்தை குணப்படுத்தினார். நோயாளிகளுக்கு மருந்தும் ஆலோசனையும் வழங்கி சத்தியத்தைச் சரிவர கடைப்பிடிக்காதவர்களுக்கு திருநீறு மூலம் சரி செய்து விடுவார். முஸ்லீம்களும் இந்துக்களும் பாபாவை அவரவர் மதச் சடங்குப்படி வணங்கி வந்தனர். மசூதியில் புனித நெருப்புக் குண்டம் அணையாமல் எரிந்தது பாபா மசூதியில் விளக்கேற்ற அங்குள்ள இரு வணிகர்களிடம் எண்ணெய் வாங்கி விளக்கை ஏற்றினார். ஒருமுறை ஏன் தரவேண்டுமென்று நினைத்து கொடுக்க மறுத்தனர்.

உடனே பாபா கிணற்று நீரை ஊற்றி இரவு முழுவதும் மசூதியில் விளக்க எரிய வைத்தார். இதனைப் பார்த்த அனைவரும் வியந்தனர். இந்த செய்தி ஊர் முழுவதும் பரவியது. வணிகர்கள் இருவரும் தாங்கள் செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்டு பாபாவின் பக்தர்களாக மாறினார்கள்.

பாபா தங்க நிற மஞ்சள் மேனியும் நீண்ட மூக்கும் இருட்டில் நீலக் கண்களும் 5 1/2 உயரமும் நடுத்தர உடற்கட்டும் கொண்டிருந்தார். அடிக்கடி அல்லாஹ் மாலிக் என்று கூறுவார். உறக்கம் என்பது அதிகமில்லை. அதிகாலையில் எழுந்து பிரார்த்தனை செய்து தன்னை தரிசனம் செய்ய வருபவர்களுக்கு வழிசொல்லி முந்திய நாள் இரவு யோக சரீரத்துடன் எங்கும் சென்று எப்படிப்பட்ட உதவிகள் செய்யதையும் விளக்கி அதை குறித்து பேசுவார். 1896ம் ஆண்டு மஹல் சபாபதியை பாபா அழைத்து நான் மூன்று நாட்கள் அல்லாஹ்விடம் செல்லப் போகிறேன் என் உடலை பாதுகாக்க வேண்டுமென்று சொல்லி உயிரை தனியாக பிரித்தார். சிலநேரம் கழித்து அங்கு பார்த்த அனைவரும் பாபா இறந்துவிட்டார் அவரை அடக்கம் செய்ய வேண்டுமென்று கூற மஹல்சபாபதி மட்டும் முடியவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது என்று தடுத்து மூன்று தினங்கள் பாதுகாத்தார். பாபா மீண்டும் உடலில் புகுந்து பின்னர் 32 ஆண்டு காலம் அருளாட்சி புரிந்தார். இப்படி பல்வேறு அற்புதங்கள் புரிந்து ஷீரடி சாயிபாபா 1918ம் ஆண்டு விஜயதசமி நன்னாளில் மஹாசமாதி அடைந்தார். இன்றும் பல பக்தர்கள் கனவில் சூட்சும உருவில் தோன்றி எண்ணற்ற நன்மைகள் அளிக்கும் பாபாவின் பெருமைக்கு அளவே இல்லை. பாபாவை வியாழக்கிழமை தோறும் தவறாமல் வணங்கினால் நன்மை பெருகும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓம் சாய் ராம்

## ஷீரடி ஸாயி பாபாவின் அஷ்டோத்ர நாமாவளி

1. ஓம் ஸ்ரீ ஸாயிநாதாய ........................................ நமஹ
2. ஓம் ஸ்ரீ லக்ஷ்மி நாராயணாய ........................................ நமஹ
3. ஓம் ஸ்ரீ கிருஷ்ண ராம சிவ மாருத்யாதி ரூபாய.............. நமஹ
4. ஓம் சேஷ சாயினே........................................ நமஹ
5. ஓம் கோதாவரீ தட ஷீரடி வாஸினே........................................ நமஹ
6. ஓம் பக்த ஹ்ருதாலயாய ........................................ நமஹ
7. ஓம் ஸர்வ ஹ்ருத்வாஸினே........................................ நமஹ
8. ஓம் பூதாவாஸாய ........................................ நமஹ
9. ஓம் பூதபவிஷ்யத் பாவ வரஜிதாய ........................................ நமஹ
10. ஓம் காலாதீதாய........................................ நமஹ
11. ஓம் காலாய ........................................ நமஹ
12. ஓம் காலகாலாய ........................................ நமஹ
13. ஓம் காலதர்பதமனாய ........................................ நமஹ
14. ஓம் ம்ருத்யுஞ்ஜயாய ........................................ நமஹ
15. ஓம் அமர்த்யாய ........................................ நமஹ
16. ஓம் மத்ர்யாபயப்ரதாய ........................................ நமஹ
17. ஓம் ஜீவாதாராய ........................................ நமஹ
18. ஓம் ஸர்வாதாராய ........................................ நமஹ
19. ஓம் பக்தாவன ஸமர்த்தாய ........................................ நமஹ
20. ஓம் பக்தாவன ப்ரதிக்ஞாய ........................................ நமஹ
21. ஓம் அன்னவஸ்த்ரதாய ........................................ நமஹ
22. ஓம் ஆரோக்யஷேமதாய ........................................ நமஹ
23. ஓம் தனமாங்கல்யப்ரதாய ........................................ நமஹ
24. ஓம் ருத்தி ஸித்திதாய ........................................ நமஹ
25. ஓம் புத்ர மித்ர களத்ர பந்துதாய ........................................ நமஹ
26. ஓம் யோகஷேமவஹாய ........................................ நமஹ
27. ஓம் ஆபத்பாந்தவாய ........................................ நமஹ
28. ஓம் மார்கபந்தவே ........................................ நமஹ
29. ஓம் புக்தி முக்தி ஸ்வர்காபவர்க தாய ........................................ நமஹ
30. ஓம் ப்ரியாய ........................................ நமஹ
31. ஓம் ப்ரீதிவர்தனாய ........................................ நமஹ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. ஓம் அந்தர்யாமினே ........................................................நமஹ
33. ஓம் ஸச்சிதாத்மனே ........................................................நமஹ
34. ஓம் நித்யானந்தாய ........................................................நமஹ
35. ஓம் பரமஸௌக்ருதாய ........................................................நமஹ
36. ஓம் பரமேச்வராய ........................................................நமஹ
37. ஓம் பரப்ரம்ஹனே ........................................................நமஹ
38. ஓம் பரமாத்மனே ........................................................நமஹ
39. ஓம் ஞான ஸ்வரூபிணே ........................................................நமஹ
40. ஓம் ஜகத் பித்ரே ........................................................நமஹ
41. ஓம் பக்தனாம் மாத்ரு தாத்ரு பிதாமஹாய ........................நமஹ
42. ஓம் பக்தாபய ப்ரதாய........................................................நமஹ
43. ஓம் பக்த பராதீனாய ........................................................நமஹ
44. ஓம் பக்தானுக்ரஹ காதராய ........................................................நமஹ
45. ஓம் சரணாகத வத்ஸலாய........................................................நமஹ
46. ஓம் பக்தி சக்தி ப்ரதாய ........................................................நமஹ
47. ஓம் ஞான வைராக்ய தாய........................................................நமஹ
48. ஓம் ப்ரேம ப்ரதாய ........................................................நமஹ
49. ஓம் ஸம்சய ஹ்ருதய தௌர்பல்ய பாபகர்ம வாஸனா சயகராய ...... நமஹ
50. ஓம் ஹ்ருதய க்ரந்தி பேதகாய........................................................நமஹ
51. ஓம் கர்ம த்வம்சினே ........................................................நமஹ
52. ஓம் சுத்த ஸத்வஸ்திதாய........................................................நமஹ
53. ஓம் குணாதீத குணாத்மனே ........................................................நமஹ
54. ஓம் அனந்த கல்யாண குணாய ........................................................நமஹ
55. ஓம் அமித பராக்ரமாய........................................................நமஹ
56. ஓம் ஜயினே ........................................................நமஹ
57. ஓம் துர்தர்ஷா சோப்பாய........................................................நமஹ
58. ஓம் அபராஜிதாய........................................................நமஹ
59. ஓம் த்ருலோகேஷூ அஸ்கந்தித கதயே........................................................நமஹ
60. ஓம் அசக்யா ரஹிதாய........................................................நமஹ
61. ஓம் ஸர்வ சக்தி மூர்த்தயே ........................................................நமஹ
62. ஓம் ஸ்வரூப ஸௌந்தராய ........................................................நமஹ
63. ஓம் ஸுலோசனாய ........................................................நமஹ
64. ஓம் பஹூ நப விஸ்வ மூர்த்தியே........................................................நமஹ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

65. ஓம் அரூபா வயக்தாய..............................................நமஹ
66. ஓம் அசிந்த்யாய..............................................நமஹ
67. ஓம் ஸூஷ்மாய..............................................நமஹ
68. ஓம் ஸர்வாந்தர்யாமினே..............................................நமஹ
69. ஓம் மனோவாக தீதாய..............................................நமஹ
70. ஓம் ப்ரேம மூர்த்தயே..............................................நமஹ
71. ஓம் ஸூலப துர்லபாய..............................................நமஹ
72. ஓம் அஸஹாய ஸஹாயாய..............................................நமஹ
73. ஓம் அநாத நாத தீன பந்தவே..............................................நமஹ
74. ஓம் ஸர்வ பாரப்ருதே..............................................நமஹ
75. ஓம் அகர்மானேக கர்ம ஸூகர்மிணே..............................................நமஹ
76. ஓம் புண்ய ஸ்ரவண கீர்த்தனாய..............................................நமஹ
77. ஓம் தீர்த்தாய..............................................நமஹ
78. ஓம் வாஸூ தேவாய..............................................நமஹ
79. ஓம் ஸதாம் கதயே..............................................நமஹ
80. ஓம் ஸத் பாராயணாய..............................................நமஹ
81. ஓம் லோக நாதாய..............................................நமஹ
82. ஓம் பாவனானகாய..............................................நமஹ
83. ஓம் அம்ருதாம்சவே..............................................நமஹ
84. ஓம் பாஸ்கர ப்ரபாய..............................................நமஹ
85. ஓம் ப்ருஹ்மசர்யதப: சர்யாதி ஸூவ்ரதாய..............................................நமஹ
86. ஓம் ஸத்ய தர்ம பராயணாய..............................................நமஹ
87. ஓம் ஸித்தேச்வராய..............................................நமஹ
88. ஓம் ஸித்த ஸங்கல்பாய..............................................நமஹ
89. ஓம் யோகேச்வராய..............................................நமஹ
90. ஓம் பகவதே..............................................நமஹ
91. ஓம் பக்த வத்ஸலாய..............................................நமஹ
92. ஓம் ஸத் புருஷாய..............................................நமஹ
93. ஓம் புருஷோத்தமாய..............................................நமஹ
94. ஓம் ஸத்ய தத்வ போதகாய..............................................நமஹ
95. ஓம் காமாதி ஷட் வைரி துவம்ஸினே..............................................நமஹ
96. ஓம் அபேதா நந்தானுபவ ப்ரதாய..............................................நமஹ
97. ஓம் ஸம ஸர்வ மத ஸம்மதாய..............................................நமஹ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

98. ஓம் ஶ்ரீ தக்ஷிணா மூர்த்தியே ........................................நமஹ
99. ஓம் ஶ்ரீ வேங்கடேச ரமணாய ........................................நமஹ
100. ஓம் அத்புதானந்த சர்யாய ........................................நமஹ
101. ஓம் ப்ரபன்னார்த்தி ஹராய ........................................நமஹ
102. ஓம் ஸம்ஸார ஸர்வதுக்க ஷயகராய ..............................நமஹ
103. ஓம் ஸர்வவித் ஸர்வதோ முகாய....................................நமஹ
104. ஓம் ஸர்வாந்தர் பஹிர்ஸ்தி தாய....................................நமஹ
105. ஓம் ஸர்வ மங்களஹராய ........................................நமஹ
106. ஓம் ஸர்வா பீஷ்டப்ரதாய ........................................நமஹ
107. ஓம் ஸமரஸ ஸன்மார்க ஸ்தாபனாய ............................நமஹ
108. ஓம் ஶ்ரீ ஸமர்த்த ஸத்குரு ஸாயிநாதாய............................நமஹ

ஓம் ஶ்ரீ ஸச்சிதானந்த ஸத்குரு ஸாயிநாத் மஹராஜ் கீ ஜெய்

இந்தத் துதிமாலை, ஶ்ரீ ஸாயிபாபா உடலுடன் இருந்தபோதே, 1918-ம் ஆண்டு செப்டம்பர் 9-ம் தேதி எழுதி முடிக்கப்பட்டது. இதற்குப் பின் 37 தினங்களில் அக். 15ம் திகதி செவ்வாய்க்கிழமை பாபா உடலை நீத்தார்.

1. ஶ்ரீ கணேசனை வணங்குகிறேன். எல்லாவற்றுக்கும் ஆதாரம் ஆனவனே, மயீரேஸ்வரா, எல்லாவற்றுக்கும் சாஷியாக விளங்குபவனே, கௌரியின் மகனே, ஓ எண்ணங்களுக்கு எட்டாதவனே, பெருத்த வயிறனே, ஶ்ரீ கணபதி என்னைக் காப்பாற்று.

2. நீ எல்லாக்கணங்களுக்கும் முதல்வனும் தலைவனும் ஆவாய். எனவே உன்னைக் கணேசன் என்பர். எல்லா சாஸ்திரங்களாலும் ஏற்றுக் கொள்ளப் பட்டவன் நீ.

3. ஓ சாரதா, வாக்கின் தெய்வமே, நீ ஒலி வடிவாகப் பிறக்கும் பதங்களின் தலைவி. உன்னுடைய இருப்பினால் தான் உலகத்தில் எல்லா நிகழ்ச்சிகளும் நடக்கின்றன.

4. நீ எழுத்தாளர்களின் தேவதை. நீ எப்போதும் தேசத்தின் அணிகலனாக விளங்குகிறாய். உனது எல்லையற்ற சக்தி எல்லாவற்றிலும் விளங்குகிறது. ஓ, ஜகதம்பா! உன்னை வணங்குகிறேன்.

5. ஓ பூர்ணப்பிரம்மா (தெய்வீகத் தோற்றத்தின் மிகவுயர்ந்த இறுதி நிலையில் உள்ளவனே) மஹான்களுக்குப் பிரியமானவனே, குணங்களோடு கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவம் எடுத்தவனே, பண்டரீராயா, கருணைக்கடலே, எல்லையற்ற கருணை உடையவனே, பாண்டுரங்கா, ஓ நரஹரி!

6. நீ எல்லாவற்றின் ஸூத்ரதாரி (எல்லாவற்றையும் ஆட்டுவிக்கும் கயிற்றைத் தாங்கியவன்) நீ ஜகமெங்கும் வியாபித்துள்ளாய். எல்லா சாஸ்திரங்களும் உன்னுடைய உண்மையான உருவத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்கின்றன.

7. வெறும் புத்தக அறிவு மட்டுமே பெற்றவர்களுக்கு நீ காணப்படுவதில்லை. ஓ சக்ரபாணி, அத்தகைய அறிவிலிகள் யாவரும் வெறும் வாதப்பிரதி வாதங்களிலேயே உளல்கிறார்கள்.

8. மஹான்கள் மட்டுமே உன்னை அறிகிறார்கள். மற்றவர்கள் (குழப்பத்தில் மூழ்கியவர்களாக) மயங்கியவர்களாக உள்ளார்கள். உனக்கு, பக்தியோடு கூடிய எனது சாஷ்டாங்க நமஸ்காரத்தை சமர்ப்பிக்கிறேன்.

9. ஓ ஐந்து முகங்களுடையவனே, சங்கரா, மனித மண்டையோடுகளாலான மாலை அணிந்தவனே, நீல நிறமுடைய கழுத்தனே, திகம்பரா, ஓங்காரரூபா, பசுபதி.

10. எவருடைய உதடுகளில் உனது நாமம் விளங்குகிறதோ அவர்களது துன்பங்கள் உடனடியாக விலகிவிடும். ஓ தூர்ஜடீ, உன் நாமத்தின் மஹிமை அத்தகையது.

11. உமது பாதங்களை வணங்கி நான் இந்தத் துதியை எழுத முற்படுகிறேன். நீலகண்டா, இதற்கு உனது முழுமையான உதவியை எல்லாவிதத்திலும் எனக்கு அளிப்பாய்.

12. இப்போது அத்ரி மஹரிஷியின் குமாரனான தத்தரையும் லஷ்மிதேவியின் குல தெய்வமான விஷ்ணுவையும், ஸ்ரீ துகாராம் முதலான எல்லா மஹான்களையும் பின்னர் பக்தர்கள் அனைவரையும் வணங்குகிறேன்.

13. சாயிநாதா உமக்கு வெற்றியுண்டாகுக. பாவிகளை உய்விப்பவரே, அருள் நிறைந்தவரே, இப்போது உமது பாதங்களில் எனது சிரத்தை வைக் கின்றேன். எனக்கு பயமற்ற நிலையைக் (உமது பாதுகாப்பை) கொடும்.

14. நீ பூரணமான ப்ரஹ்மஸ்வரூபம், சுகங்களின் இருப்பிடம், மனிதர்களிற் சிறந்தவனே, நீயே விஷ்ணு. எவருடைய பாதி உடலாக உமா இருக்கிறாளோ அந்தக் காமனை எரித்த சிவனும் நீயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. நீ மனித உருவெடுத்த பரமேஸ்வரன்; நீ ஞான வானத்தின் கதிரவன்; நீ கருணைக்கடல்; நீ பிறப்பிறப்பாகிய பிணிக்கு மருந்து.

16. நீ ஏழை எளியவர்களின் சிந்தாமணி. நீ உனது பக்தர்களைத் தூய்மைப் படுத்தும் கங்கா நதி. சம்சாரக் கடலில் முழுகுபவர்களுக்கு நீ ஓடம். அஞ்சுப வர்களுக்குப் புகலிடம் நீ.

17. இந்த பிரபஞ்சத்தின் மூலகாரணமாக எந்தப் பரிசுத்தமான சைதன்யம் விளங்குகிறதோ, ஓ கருணைக் கடலே அது நீயே இந்த பிரபஞ்சம் உனது ஒரு விளையாட்டு.

18. நீர் பிறவியற்றவர் உமக்கு இறப்பும் இல்லை. நன்கு ஆழ்ந்து விசாரித்துப் பார்த்து இறுதியில் அடையப்பட்ட முடிவு இது.

19. பிறப்பு இறப்பு இவையிரண்டும் அஞ்ஞானத்தினால் தோன்றியவை. ஓ மஹாராஜா நீர், அவை இரண்டினின்றும் கொஞ்சம் கூடப் பற்றற்றவராக உள்ளீர்.

20. நீர் ஓடையில் வெளிப்பட்டது என்றால் அது அங்கேயே தோன்றியதாக ஆகுமா? முன்பே நீர் நிரம்ப உள்ளது. உள்ளேயிருந்து வெளியே வந்தது. அவ்வளவே.

21. படுகையில் நீர்வந்த போது அதற்கு ஓடை என்ற பெயர் ஏற்பட்டது. நீரில்லா விடில் அது வெறும் படுகையே.

22. பெருகுவது, வற்றிவிடுவது பற்றி நீர் சற்றும் பொருட்படுத்துவதே இல்லை. நீர், படுகைக்குக் கொஞ்சமேனும் முக்கியத்துவமும் அளிப்பதில்லை.

23. படுகை மட்டும் நீர் நிறைந்துள்ள போது பெருமை கொள்கிறது. நீர் வற்றும் போது மிகவும் வருந்தும் நிலையை அடைகிறது.

24. மனித உடல் நீர்ப்படுகை போன்றது. சுத்த சைதன்யமே பரிசுத்தமான நீர் ஊற்று. நீர்ப்படுகைகள் எண்ணற்றவை இருப்பினும் நீர் மட்டும் வேறுபடுவதில்லை.

25. பிறப்பற்றவரான அருட்கடலே, உமது வஜ்ராயுதம் என் அஞ்ஞானமாகிய மலையை அழிக்கட்டும் என்று வேண்டுகிறேன்.

26. இத்தகைய எண்ணற்ற தோற்றங்கள் இதுவரை பூமியில் ஏற்பட்டுள்ளன; இப்போதும் இருந்து வருகின்றன. காலக்கிரமத்தில் இனிமேலும் ஏற்படப் போகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. அந்த ஒவ்வொரு தோற்றத்திற்கும் ஒரு தனிப் பெயரும், உருவமும் கிடைக்கிறது. அதன் மூலம் உலகத்தில் அவற்றைப் பிரித்தறிகிறார்கள்.

28. சைதன்யத்தைப் பொறுத்தவரை "நான் - நீ" என்று கூறுவது பொருந்தாது. இருமை என்பதே எங்கு இருப்பதற்கு இடமில்லையோ அதே உண்மையில் சைதன்யம் எனப்படுவது.

29. மேலும் உண்மையில் சைதன்யம் பிரபஞ்சம் முழுவதையும் வியாபித்து உள்ளது. பின் "நான் - நீ" என்ற பாவனை எவ்வாறு பொருந்தும்?

30. மேகத்திலிருந்து பிறக்கும் நீர் ஒரே தன்மையானது. பூமியின் மேல் இறங்கிய பிறகு அதற்கு பற்பல வேறுபாடுகள் ஏற்படுகின்றன.

31. கோதாவரி நதிப்படுகையில் விழுந்த நீர் கோதாவரி என்று அழைக்கப்படு கின்றது. கிணற்றில் விழுந்த நீருக்கு அத்தகைய மேன்மை இல்லை.

32. மஹான்களின் உருவமாகிய கோதாவரியில் உள்ள நீர் நீங்கள். நாங்கள் குளம், குட்டை, கிணறு போன்றவர்கள். நம்மிடையே உள்ள வேறுபாடு இதுவே.

33. எங்களுடைய வாழ்வின் உண்மையான குறிக்கோளை அடைய நாங்கள் உங்களிடம் வரவேண்டும். எப்போது, கரங்கூப்பி உங்களைச் சரணடைய வேண்டும். ஏனெனில் நீங்கள் புனிதத்தின் உறைவிடம்.

34. கோதாவரி நதிக்கு பாத்திரத்தினால் (படுகையினால்) புனிதம் ஏற்பட்டது. வெறும் நீரை மட்டுமே நோக்குவோமாகில் அது எங்கும் ஒரே விதமானது.

35. கோதாவரி நதிப்படுகை புனிதம் வாய்ந்ததென்பது தீர்மானிக்கப்பட்ட உண்மை. அதனைத் தீர்மானிப்பதற்கு பூமியின் நல்ல தன்மை, தீய தன்மை ஆகியவையே உதவி செய்கின்றதென்பதை நோக்கவும்.

36. மேகத்தினின்று வந்த நீரின் புனிதத்தை எந்தப் பூமிபாகம் மாற்றவில்லையோ அந்த பாகத்தை சாஸ்திரமறிந்தவர்கள் கோதா என்று அழைத்தார்கள்.

37. மற்ற இடங்களில் விழுந்த நீர் அந்தந்த மண்ணின் குணத்தை ஏற்றுக் கொண்டது. தோற்றத்தின் போது இனிமையாயிருந்த நீர் அசுத்தமாகவும், கசப்பாகவும், உப்பாகவும் ஆயிற்று.

38. அவ்வாறே, ஓ குருவரா, எந்த சரீரத்தில் ஆறு வைரிகளின் மாசு ஏற்பட வில்லையோ அந்தப் புனிதமான சரீரத்துக்கு மஹான் என்ற பெயர் பொருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. எனவே மேன்மையும் புனிதமும் பொருந்திய மஹான்களை அந்த கோதாவரி என்றே கூறுகிறேன். எல்லா ஜீவன்களிலும் உங்களது தகுதி மிகச் சிறந்ததாக உள்ளது.

40. பிரபஞ்சத்தின் ஆரம்ப காலத்திலிருந்தே கோதாவரி ஏற்பட்டு உள்ளது. நீரும் முழுமையாக நிரம்பி உள்ளது. இன்று வரை அதற்குக் குறைவு ஏற்படவில்லை.

41. ராவணனுடைய வைரி கோதாவரியின் கரைக்கு வந்த போது இருந்த அதே நீர் இன்று வரை எவ்வாறு இருக்கும் என்று பாருங்கள்.

42. படுகை மட்டும் அதே: நீர் கடலை அடைந்து. நீர்ப் படுகையின் புனிதத் தன்மை மட்டும் இன்று வரை நிரந்தரமாக உள்ளது.

43. ஒவ்வொரு ஆண்டும் பழைய நீர் சென்று புதிய நீர் படுகையின் உள்ளே வருகிறது. பாபா, அதே நியாயம் உங்களுக்கும் பொருந்தும்.

44. ஒவ்வொரு நூற்றாண்டும் ஒரு ஆண்டைப் போலவும், அந்த நூற்றாண்டில் தோன்றிய ஸாதுக்கள் நீரைப் போலவும் அவர்களுள் மிகப் பெரிய மஹான்கள் அலைகள் போலவும் உவமிக்கப்படுகிறார்கள்.

45. இந்த மஹான்களின் உருவமாகிய கோதாவரியில் முதல் ஆண்டில் ஸனத, ஸனக ஸநந்தனர் முதலியோரின் வெள்ளம் ஏற்பட்டது.

46. பின்னர் நாரதர், தும்புரு, துருவன், ப்ரஹலாதன், பலிராஜா, சபரீ, அங்கதன், வாயு குமாரன் விதுரர், கோபர்களும் கோபிகைகளும் தோன்றினர்.

47. இவ்வாறு, இன்று வரை ஒவ்வொரு நூற்றாண்டிலும் ஒன்றன் பின் ஒன்றாக (மஹான்களின்) வெள்ளம் ஏற்பட்டு வந்துள்ளது. நான் அதனை வர்ணிப்பதற்கு இயலாதவனாக உள்ளேன்.

48. ஓ சாயி நாதா, இந்த நிகழும் நூற்றாண்டில் மஹான்களின் தோற்றமாகிய கோதாவரியில் நிச்சயமாக உமது வெள்ளம் வந்துள்ளது.

49. எனவே உமது திவ்யசரணார விந்தங்களுக்கு வந்தனை செய்கிறேன். மஹாராஜா, எனது துர்க்குணங்களைக் கொஞ்சம்கூடப் பொருட்படுத்த வேண்டாம்.

50. நான் ஏழை, எளியவன், அஞ்ஞானி, பாவிகளுக்குள்ளே தலைசிறந்தவன். எல்லா துர்குணங்களும் பொருந்தியவன். ஆனால் என்னை நிராகரிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51. பரிசக்கல் இரும்பினுடைய குறைகளைப் பொருட்படுத்துவதில்லை. கோதாவரி நதி தன்னையடைந்த கிராமத்துச் சிறு ஓடைகளைத் திருப்பி அனுப்புவதில்லை.

52. உங்களுடைய அருள் நோக்கைச் செலுத்தி என்னிடமுள்ள எல்லாத் தீயகுணங்களையும் விரைவாக அழித்து விடுங்கள். அடியேனுடைய வேண்டுதல் இதுவே.

53. பரிசக்கல்லின் தொடர்பு ஏற்பட்டும் இரும்பின் இரும்புத் தன்மை அழிக்கப்படா விட்டால், குருவரா, அது பரிசக்கல்லின் பெருமைக்கு இழுக்கு.

54. என்னைப் பாவியாகவே இருக்கும்படி வைக்காதீர். தாங்கள் தாழ்வும் அடைய வேண்டாம். நீங்கள் பரிசக்கல், நான் இரும்பு, எனது அவமானம் உமதே என்பதைப் பாருங்கள்.

55. குழந்தை எப்போதும் தவறுகள் செய்கிறது. ஆனால் தாய் சினம் கொள்வ தில்லை. இதை நினைவிற் கொண்டு எனக்கு உங்கள் அருளாகிய பிரசாதத்தை அளிப்பீராக.

56. ஓ ஸத்குரு ஸாயிநாதா, நீயே எனது கற்பகத் தரு. சம்சார சாகரத்தைக் கடக்க உதவும் சிறந்த படகு நிச்சயமாக நீயே.

57. நீ காமதேனு, சிந்தாமணி நீ ஞான வானத்தின் நீ கதிரவன். நற்குணங்களின் பெரும் சுரங்கம். ஸ்வர்க்கத்திற்குச் செல்ல உதவும் படிக்கல்லும் நீயே.

58. ஓ புண்ணியங்களின் இருப்பிடமே, சுத்திகரிப்பவரில் சிறந்தவரே, ஓ சாந்த மூர்த்தி, ஆனந்தத்தின் உறைவிடமே, ப்ரஹ்மஸ்வரூபா, பரிபூரணனே, வேறுபாடு அற்றவனே, ஞானக் கடலே.

59. ஓ ஞானத்தின் உருவமே, மனிதர்களிற் சிறந்தவனே, பொறுமை சாந்தி ஆகியவற்றின் உறைவிடமே, பக்தர்களின் இளைப்பாறுமிடமே, என்பால் மகிழ்வு நிறைந்த உன் அருள்நோக்கைச் செலுத்து.

60. ஸத்குரு மச்சீந்தரரும் நீயே, மஹாத்மா ஜாலந்தரரும் நீயே, நீயே நிவிருத்தி நாதரும், ஞானேஸ்வரரும், ஆவாய், கபீர், ஷேக் முஹம்மது, ஏசுநாதர் ஆகியோரும் நீயே.

61. நீயே போதலாவும், ஸாவதாமாளியும் உண்மையில் ராமதாஸரும் நீயே, ஸாயிநாதா நீயே துகாராம், ஸகாராம் மஹராஜும் மாணிக்கப் பிரபுவும் நீயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

62. உமது இந்த அவதாரம் உண்மையில் அறிய முடியாத விதமாக உள்ளது. தங்களுடைய ஜாதியைப் பற்றி எவரும் அறிந்து கொள்ளும்படித் தாங்கள் விடவில்லை.

63. சிலர் உங்களை முஸ்லீம் என்கின்றனர். சிலர் அந்தணர் என்கின்றனர். கிருஷ்ணனுக்குச் சமமாக லீலைகளைத் தாங்கள் செய்கிறீர்கள்.

64. ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்த்து ஜனங்கள் பலவிதமாகப் பேசினர். சிலர் யதுகுலத்து அரிய ஆபரணம் என்றனர். சிலர் இடையன் என்றனர்.

65. யசோதை மென்மையான குழந்தை என்றாள். கம்ஸன் மஹாகாலன் என்றான். உத்தவர் அன்பு வடிவானவன் என்றார். அர்ஜுனன் பூர்ணஞானி என்றான்.

66. அவ்வாறே, குருவரா, தங்களைப் பற்றியும், தத்தமது மனத்தில் நிச்சயப் படுத்தியதற்குத் தக்கபடி அவரவர்கள் அழைக்கின்றனர்.

67. மசூதி உங்களது இருப்பிடம், உமது காதுகள் குத்தியிருக்கப்படவில்லை, உங்களது பாதியா சடங்கையும் பார்த்துவிட்டு உங்களை முஸ்லீம் என்று கூறுவது பொருத்தமாகவே உள்ளது.

68. அவ்வாறே கருணை உருவான உமது அக்னி வழிபாட்டைப் பார்த்து, நீங்கள் ஹிந்து தான் என்று எங்கள் மனதில் நிச்சயம் ஏற்பட்டது.

69. ஆனால் வெளி விவகாரங்களில் உள்ள இத்தகைய வேறுபாடுகளைத் தர்க்க வாதிகளே விரும்புவார்கள். உண்மையான ஞானத்தில் ஆர்வமுள்ள பக்தர்கள் அவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கமாட்டார்கள்.

70. நீங்கள் பிரஹ்மத்தின் நிலையில் விளங்குகிறீர்கள். உங்களுக்கு ஜாதியும் கோத்திரமும் இல்லை. நீர் எல்லோருக்கும் குருமூர்த்தியாயும் ஆதிகாரண மாகவும் உள்ளீர்.

71. முஸ்லீம் இந்துக்களுக்கிடையே பகைமை ஏற்பட்டதால் அவர்களை ஒற்றுமைப்படுத்துவதற்காக மசூதி, அக்னி இரண்டையும் ஏற்று பக்தர்களுக்கு உங்கள் லீலையைக் காட்டினீர்கள்.

72. தாங்கள் ஜாதி மதங்களுக்கு அப்பாற்பட்டவர். நீங்கள் பிரஹ்மமே. உண்மையில் நீங்கள் அது (தத்வமஸி) நீங்கள் உண்மையில் தர்க்கங்களுக்கு அப்பாற்பட்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

73. உங்கள் முன்னால் எவ்வளவோ தர்க்க விதர்க்கங்கள் நிகழ்ந்தன. அங்கே எனது சாதாரண மொழிகள் எப்படி எடுபடும்?

74. ஆனால் உங்களைப் பார்க்கும் போது என்னால் மௌனமாக இருக்க முடியவில்லை. துதி செய்வதற்கு உலக வழக்கில் பதங்களே சாதனமாக உள்ளன.

75. எனவே உங்கள் அருளாசியுடன் பதங்களால் என்னென்ன வர்ணனைகள் ஏற்படுகின்றனவோ அவற்றை எப்போதும் செய்வேன்.

76. மஹான்களின் தகுதி கடவுளின் தகுதியைவிட வேறுபட்டதும் மிகவுயர்ந்ததும் ஆகும். ஸாதுக்களின் அருகில் "எனது. உனது", என்ற வேறுபாடுகளுக்குச் சிறிதேனும் இடமில்லை.

77. ஹிரண்யகசிபுவுக்கும் ராவணனுக்கும் கடவுளை வெறுத்ததன் மூலம் மரணம் ஏற்பட்டது. இத்தகைய சம்பவம் ஒன்று கூட மஹான்களின் கரத்தால் நிகழவில்லை.

78. அரசன் கோபீசந்தன் ஜாலந்தரரைச் சாணக் குவியலில் புதைத்தான். ஆனால் மஹான் மனம் வருந்தவில்லை.

79. மாறாக, அந்த அரசனைச் சம்சாரச் சுழலிலிருந்து விடுவித்து அமரனாகச் செய்துவிட்டார். இத்தகைய மஹான்களின் மேன்மையை எவ்வாறு வர்ணிப்பேன்?

80. மஹான்கள் சூர்யனைப் போன்றவர்கள், அவர்களின் கருணை ஒளிமய மானது. மஹான்கள் சுகம் தரும் சந்திரனைப் போன்றவர்கள். அவர்களது அருள் சந்திரனுடைய ஒளி போன்றது.

81. மஹான்கள் இதமளிக்கும் கஸ்தூரி போன்றவர்கள். அவர்களது அருள் அதன் நறுமணம் போன்றது. மஹான்கள் ரசம் நிரம்பிய கரும்பு போன்றவர்கள். அவர்களது அருள் அந்த ரசத்தின் இன்சுவை போன்றது.

82. மஹான்கள் நல்லவரிடமும், தீயவரிடமும் ஒரே விதமாக நடந்து கொள்கிறார்கள். மாறாக, பாவிகளிடமே எல்லையற்ற அன்புள்ளவர்களாக உள்ளார்கள்.

83. கோதாவரி நதியின் நீரில் அழுக்கடைந்த துணிகளே துவைக்கப்படுவதற்காக வருகின்றன. சுத்தமானவை, கோதாவரியின்று வெகு தொலைவில் பெட்டியிலேயே தங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84. பெட்டியில் வைக்கப்பட்டிருந்த அந்தத் துணியும் ஒரு முறை கோதாவரியின் படுகையில் நன்றாகத் துவைக்கப்படுவதற்காக வந்தது.

85. இந்த உவமையில் பெட்டி தான் வைகுண்டம். நீங்களே கோதாவரி. நம்பிக்கையே படித்துறை. ஜீவாத்மாக்களே துணிகள். ஆறு வித விகாரங்களே அவைகளைப் பற்றியுள்ள அழுக்கு.

86. உங்களது பாதாரவிந்தங்களைத் தரிசிப்பதே கோதாவரி ஸ்நானம் ஆகும். எல்லா அழுக்குகளையும் போக்கிச் சுத்தப்படுத்துவதில் நீர் மிகுந்த சாமர்த்தியசாலி.

87. ஸம்சாரத்தில் உழலும் ஜனங்களாகிய நாங்கள் மேலும் மேலும் அழுக்குப் படிந்தவர்களாக உள்ளோம். எனவே மஹான்களின் தரிசனம் பெறுவதற்கு உரிமை பெற்றவர்கள் நாங்கள்.

88. கோதாவரி நதியில் நீர் நிரம்பி உள்ளது. படித்துறையில் துவைப்பதற்கான அழுக்குத்துணிகள் உள்ளன. அவை அப்படியே (துவைக்கப்படாமல்) கிடந்தால் அது உண்மையில் கோதாவரிக்கு இழுக்கு ஆகும்.

89. நீங்கள் அடர்ந்த நிழலும், குளிர்ச்சியும் தரும் சிறந்த மரம். நாங்கள் உண்மையில் பாதசாரிகள். கதிரவன் தாபத்ரயங்களாகிய வெயிலால் எங்களை சுட்டெரிக்கின்றான்.

90. அவனுடைய தாபத்திலிருந்து கருணை கூர்ந்து ஓ குருராயா எங்களைக் காப்பாற்றும். உங்கள் நல்லருளின் குளிர்நிழல் இவ்வுலகிற்கப்பாற்பட்ட தன்மையது.

91. மரத்தின் அடியில் அமர்ந்தும் ஒருவன் மேலிருந்து வெயிலை உணர்வானாகில் அந்த மரத்தை எவர் நிழல் தரும் மரம் என்று கூறுவர்?

92. உமது அருளின்றி உலகில் நன்மை என்பது ஏற்படுவது இல்லை. தர்மத்தை நிலைநிறுத்துவதற்காக சேஷசாயி அர்ஜுனனுக்கு நண்பன் ஆனான்.

93. விபீஷணன் ஸுக்ரீவனுடைய அருளினாலேயே அரசன் ஸ்ரீராமனின் அருகாமையை அடைந்தான். மஹான்களின் மூலமாகத்தான் ஸ்ரீஹரி மேன்மையை அடைந்தார்.

94. எந்த ப்ரஹ்மத்தைப் பற்றி வேதங்களில் கூட வர்ணிக்கப்படவில்லையோ அத்தகைய பிரம்மத்தை உலகத்தில் ஸகுணமாகச் செய்து வெட்க வைத்தார்கள் மஹான்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

95. தாமாஜி என்ற பக்தர், வைகுண்டபதியும் ருக்மணி வரனுமாகிய இறைவனை ஒரு மஹார் (தாழ்ந்த குலத்தவன்) ஆக உருவெடுக்கும்படிச் செய்தார். சோகமேளா என்ற பக்தர் ஜகதாத்மா ஆன இறைவனைத் தமது எறுமைகளின் சவத்தை எடுக்கும்படி செய்தார்.

96. மஹான்களின் பெருமையை உணர்ந்த ஜகஜ்ஜீவனாகிய இறைவன் அவர்களுக்காக தண்ணீரும் சுமந்தான். உண்மையில் மஹான்கள் ஸச்சிதானந்தப் பிரபுவாகிய இறைவனின் எஜமானர்களாவார்கள்.

97. இப்போது அதிகம் சொல்வதற்கு எனக்கு வரவில்லை. நீயே எங்களுடைய தாயும் தந்தையும் ஓ ஸத்குரு ஸாயிநாதா. ஷீரடி கிராமத்தில் வசிப்பவரே.

98. பாபா. உமது லீலைகளின் உண்மையான பொருளை எவரும் அறியவில்லை. அவ்வாறு இருக்க எனது வெற்று வார்த்தைகள் எவ்வாறு அவற்றை விளக்க முடியும். சொல்லுங்கள்.

99. ஜீவன்களுக்கு உய்வளிக்கும் பொருட்டு தாங்கள் ஷீரடியில் வந்தீர்கள். அகல்களில் நீரூற்றி விளக்கேற்றி நீங்கள் எரிய வைத்தீர்கள்.

100. ஏழு சாண் நீளமுள்ள குறுகிய மரப்பலகையை நீங்கள் படுத்துக் கொள்ளும் கட்டிலாக்கி. உங்கள் யோக சாமர்த்தியத்தின் சக்தியைப் பக்தர்களுக்குக் காட்டினீர்கள்.

101. அநேக பெண்மணிகளின் மலட்டுத்தன்மையை நீக்கியருளினீர்கள். எத்தனையோ வியாதிகளை உதியின் மூலம் குணப்படுத்தினீர்கள்.

102. இவ்வுலக சம்பந்தமான துன்பங்களை நீக்குவது உமக்கு ஒரு பொருட்டே அன்று. யானை ஒன்று எறும்பை ஒரு சுமையாக எவ்வாறு கருதும்?

103. இப்போது, குருராயா இந்த எளியவன்பால் கருணை காட்டுவீராக நான் உமது பாதங்களை அண்டியுள்ளேன். என்னைத் திருப்பி அனுப்பி விடாதீர்கள்.

104. நீர் அரசர்க்கெல்லாம் அரசர் குபேரனுக்கும் குபேரர், வைத்தியர்களுக் கெல்லாம் வைத்தியர். உங்களை விடச் சிறந்தவர் எவரும் இலர்.

105. மற்ற தெய்வங்களைப் பூஜிப்பதற்கு அதற்குத் தகுந்த சிறப்பு உபகரணங்கள் உள்ளன. ஆனால் உம்மைப் பூஜிப்பதற்கு உலகில் பொருட்களே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

106. சூரியனுடைய இல்லத்தில் தீபாவளிப் பண்டிகை வந்ததென்றால் எப்பேர்ப்பட்ட பொருட்களைக் கொண்டு அதைக் கொண்டாடுவோம்?

107. சமுத்திரத்தின் தாகத்தைத் தீர்க்க இப்புவியிடத்தில் நீர் இல்லை. நெருப்பை உஷ்ணப்படுத்த எங்கிருந்து அக்னி கொண்டுவருவது?

108. ஓ ஸ்ரீஸமர்த்தா, குருராயா, பூஜைக்குரிய பொருட்கள் யாவும் உண்மையில் உமது ஆத்மாவின் அம்சமாய் உள்ளன.

109. மேற்கூறப்பட்டவை யெல்லாம் தத்வத்ருஷ்டியால் கூறப்பட்ட பேச்சுக்களே யன்றி என் மனதில் அநுபவத்தால் ஏற்பட்டவையன்று. அனுபவம் இன்றிக் கூறப்படும் பதஜாலங்கள் வீணேயாகும்.

110. போகட்டும், உலக வழக்கிலுள்ள படி உமக்கு நான் பூஜை செய்யலாம் என்றால் அதனைச் செய்வதற்குத் தேவையான திறமை எனக்கு இல்லை, எனது குருராயனே!.

111. பலவித கற்பனைகள் செய்து உமக்குப் பூஜை செய்கிறேன். அருள் மிகுந்தவரே, அடியேனுடைய அத்தகைய பூஜையை ஏற்றுக் கொள்வீராக.

112. இப்போது அன்புக்கண்ணீரால் உமது பாதங்களைக் கழுவுகிறேன். உண்மையான பக்தியாகிய சந்தனத்தை அரைத்து உமக்குப் பூசுகிறேன்.

113. எனது அழகிய பதங்களாகிய இந்தக் கபனியை உமக்கு அணிவிக்கிறேன். ப்ரேமை என்ற மலராலாகிய மாலையை உமது கழுத்தில் அணிவிக்கிறேன்.

114. எனது துர்க்குணங்களாகிய தூபத்தை உமக்கு முன்பு எரியவிடுகிறேன். அது மிக தீய பொருளாயினும் அதனின்று தீய வாசனை எழுவதில்லை.

115. ஸத்குருவுக்கு முன்பு அன்றி வேறு எங்கெங்கு தூபம் எரியவிடப்படுகிறதோ அங்கெல்லாம் தூபப் பொருளுக்கு ஏற்படும் நிலை வருமாறு.

116. தூபத்திரவியத்துக்கு அக்னியின் ஸ்பர்சம் ஏற்பட்ட மாத்திரத்தில், அதனது நறுமணம் என்ற நல்ல குணம் அதனைவிட்டு விட்டுச் சென்று விடுகிறது.

ஓம் சாய் ராம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ சாயிபாபா விரத விதிமுறைகள்

1. இந்த விரதம் ஆண்.பெண்.குழந்தைகள் யார் வேண்டுமானாலும் செய்யலாம்.

2. இந்த விரதத்தை ஜாதி. மத பேதமின்றி எந்த சார்பினரும் செய்யலாம்.

3. இந்த விரதம் அற்புத பலன்கள் தரவல்லது. 9 வியாழக்கிழமைகள் விதி முறைப்படி விரதம் இருந்தால் நிச்சயமாக விரும்பிய எண்ணங்கள் நிறைவேறும்.

4. விரதத்தை எந்த ஒரு வியாழக்கிழமையானாலும். சாயிநாமத்தை எண்ணி ஆரம்பிக்கலாம். எந்த காரியத்திற்காக ஆரம்பிக்கிறோமோ. அதை தூய மனதில் சாயிபாபாவை எண்ணி பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும்.

5. காலை அல்லது மாலையில் சாயிபாபாவின் போட்டோவிற்கு பூஜை செய்ய வேண்டும். ஒரு தூய ஆசனத்தில் அல்லது பலகையில் மஞ்சள் துணியை விரித்து அதன் மேல் சாயிபாபா போட்டோவை வைத்து தூய நீரால், துணியால் துடைத்து. சந்தனம். குங்குமம் வைத்து திலகம் இட வேண்டும். மஞ்சள் நிற மலர்கள் அல்லது மாலை அணிவிக்கவும். ஊதுபத்தியும். தீபமும் ஏற்றி சாயிவிரத கதையைப் படிக்கவும். சாயிபாபாவை ஸ்மரணை செய்யவும். நைவேத்தியம் வைத்து (பழங்கள், இனிப்புகள். கற்கண்டு எதுவானாலும்) பிரசாதத்தை விநியோகிக்கவும்.

6. இந்த விரதத்தை பழ.திரவிய ஆகாரங்கள்(பால்.டீ.கோப்பி.பழங்கள். இனிப்புகள்) உட்கொண்டு செய்யவும்.அப்படி நாள் முழுவதும் செய்ய முடியாதவர்கள் ஏதாவது ஒரு வேளை(மதியமோ.இரவோ) உணவு அருந்தலாம். நாள் முழுவதும் வெறும் வயிற்றோடு பட்டினியாக இந்த விரதம் செய்யவே கூடாது.

7. 9 வியாழக்கிழமைகளும் முடிந்தால் சாயிபாபா கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்யவும். முடியாதவர்கள்(கோயில் அருகில் இல்லை என்றால்) வீட்டிலேயே சாயிபாபாவின் பூஜையைப் பக்தி சிரத்தையுடன் செய்யவும்.

8. வெளியூர் செல்வதானாலும் இந்த விரதம் கடைபிடிக்கலாம்.

9. விரதத்தின் ஒன்பது வாரங்களில் பெண்களுக்கு மாத விலக்கு அல்லது இன்ன பிற காரணங்களாலே விரதம் செய்ய முடியவில்லை என்றால் அந்த வியாழக்கிழமை கணக்கில் எடுத்து கொள்ளாமல் இன்னொரு வியாழக் கிழமை விரதம் இருந்து 9 வியாழக்கிழமைகள் நிறைவு செய்யவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## விரத நிறைவு(உத்யாபனம்) விதிமுறைகள்

1. ஒன்பதாவது வியாழக்கிழமை விரதத்தை நிறைவு செய்ய வேண்டும். அன்று ஐந்து ஏழைகளுக்கு உணவு அளிக்க வேண்டும். (உணவு தங்களால் இயன்றது) நேராக உணவு அளிக்க முடியாதவர்கள் யார் மூலமாகவும் பணமோ,உணவுப் பொருளோ கொடுத்து உணவு அளிக்க ஏற்பாடு செய்யவும்.

2. சாயிபாபாவின் மஹிமை மற்றும் விரதத்தை பரப்புவதற்காக நம்முடைய வீட்டிற்கு அருகில் வசிப்பவர், சொந்த பந்தம், தெரிந்தவர் என்று இந்த விரத புத்தகங்களை 5,11 (அ) 21 என்று இலவசமாக விநியோகம் செய்யவும்.

3. 9ஆவது வியாழக்கிழமை விநியோகிக்கும் புத்தகங்களை அன்று பூஜையில் வைத்து பிறகு விநியோகிக்கவும். இதனால் புத்தகத்தை பெறும் பக்தரின் விருப்பங்களும் ஈடேறும்.

மேற்கூறிய விதிமுறைகளின்படி விரதமும்,விரத நிறைவும் செய்தால் நிச்சயமாக எண்ணிய காரியம் நிறைவேறும். இது சாயி பக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை .





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயி ஸ்மரணை

வாரும் சாயி, வாரும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!
பக்தர் உம்மை அழைக்கின்றோம்!
விருப்பம் ஈடேற வேண்டும்!
பக்தி பலமுற வேண்டும்!
வாரும் சாயி, வாரும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!

துக்கம் போக்க வாரும் சாயி!
ஆனந்தம் அளிக்க வாரும் சாயி!
சேய் உமை அழைத்தேன் சாயி!
தாய் மனதோடு இளகுவாய் சாயி!
வாரும் சாயி,வாரும் சாயி!

கீர்த்தனம் சாயி, பூஜை சாயி!
வாழ்வும் சாயி, வளமும் சாயி!
ஆனந்தம் சாயி, செல்வம் சாயி!
அற்புதம் சாயி,அபயம் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!

ஷீர்டி வாசி எங்கள் சாயி!
பக்தரின் இனிய அன்பர் சாயி!
கருணைக் கடலே எங்கள் சாயி!
அருள் பார்வை பாரும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!

கிழக்கும் சாயி,மேற்கும் சாயி!
வடக்கும் சாயி,தெற்கும் சாயி!
எத்திசையில் நீ இருந்தாலும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!
ஹிந்து சாயி, முஸ்லிம் சாயி!

ஜீவன் சாயி,யாத்திரை சாயி!
யேசு சாயி, குருநானக் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!

தர்மம் சாயி ! கர்மம் சாயி!
தியானம் சாயி! தானம் சாயி!
தூணிலும் சாயி துரும்பிலும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!

திருப்தி சாயி முக்தி சாயி!
பூமி சாயி ஆகாயம் சாயி
சாந்தி சாயி ஓம் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!

சத்யம் சாயி, சிவம் சாயி!
சுந்தரம் சாயி ஈச்வரன் சாயி!
இரக்கம் சாயி எளியவர் சாயி!
அன்பு சாயி அமைதி சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!

சக்தி சாயி பக்தி சாயி!
சிவன் சாயி விஷ்ணு சாயி!
ப்ரஹ்மா சாயி பஞ்சபூதம் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாயி கவசம்

சீரடி வாழும் சாயி நாதா!
சேவடி பணிந்தோர்க்கருளும் ஈசா!
துவாரகமாயி ஆன சுடரே!
துனியில் விளையும் தூய உதியே!
ஆலம் அமர்ந்த தெட்சிண குருவாய்
வேலம் அமர்ந்த வித்தக வடிவே!
சாவடி என்ற தங்குமிடத்தில்
சேவடி சாற்றிச் சிறப்புச் செய்தாய்!
பாவடி புனைந்த பக்தர்க் கெல்லாம்
பரம பதத்தைப் பரிவுடன் தந்தாய்!

அணையா தீபம் ஆன்ம சொரூபம்
அருளை வழங்கும் லெண்டி தீபம்!
பூட்டி மந்திர் புண்ணிய வாசம்
புத்தொளி அருளும் சத்திய நேசம்!
தாணு மாலயன் சேர்ந்த கோலம்
தத்தர் என்னும் சித்தர் வடிவம்!
குருவே அன்னை! குருவே தந்தை!
குருவே தெய்வம்! குருவே யாவும்!
குருவே ஒளியாம்! குருவே வழியாம்!
குருவைப் பணிவோம்! அருளைப் பெறுவோம்!

சாயி பாதம் என்றும் பணியும்
சேயாம் என்னைச் சாயி காக்க!
தூலம் சூட்சுமம் இருநிலை காக்க!
வாழும் பிராண வாசியைக் காக்க!
கோசம் ஐந்தும் சாயி காக்க!
கொற்றவன் எந்தன் உயிரைக் காக்க!
காரண காரிய இயல்பைக் காக்க!
பூரண ஞானப் புலன்கள் காக்க!
நாடிகள் மூன்றையும் நாயகன் காக்க!
ஊடிடும் சக்கரம் யாவையும் காக்க!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சியில் என்றும் உன்னடி இருக்க!
மெச்சும் மேனியை மெய்யன் காக்க!
எலும்புத் தசைகளை இயல்புடன் காக்க!
இயங்கும் நரம்பு மண்டலம் காக்க!
வாதம் பித்தமம் சிலேட்டுமம் என்னும்
வகைகள் மூன்றையும் வசமாய்க் காக்க!
எந்த நோயும் வாரா தென்னை
எந்தன் சாயி என்றும் காக்க!
உச்சி முதலாய் பாதம் வரையில்
மெச்சி என்னை பாபா காக்க!

முன்னர் பின்னர் வினைகள் நீக்கி
என்னை சாயி என்றும் காக்க!
இல்லற வாழ்வில் எல்லா நலமும்
இறைவா தந்து எம்மைக் காக்க!
தேடும் மேன்மை யாவும் தந்து
தீர்க்க முடனே சாயி காக்க!
நாடும் பிள்ளைச் செல்வம் முதலாய்
நலங்கள் யாவும் தந்து காக்க!
எண்ணிரு செல்வம், இசைந்த வாழ்வு,
புண்ணிய நலங்கள், பொலிவுடன் அருள்க!

தந்திரம், மந்திரம், தம்பனம், மாரணம்
சிந்தை மயக்கும் மோகனம், வசீகரம்,
துன்பம் அளிக்கும் ஆரணம், கருடணம்,
வம்பை வளர்க்கும் சாடனம், பேதனம்,
எந்த வடிவில் எவ்வா றாயினும்,
எதுவும் என்னை அணுகா திருக்க,
உந்தன் நாமம் உருகியே சொல்ல
வந்த வினையை வாட்டியே ஒழிப்பாய்!
துட்ட தேவதை, தொடரும் பிசாசு,
கெட்ட மிருகம், கெடுக்கும் உறவு,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இட்ட ஏவல், எமபதை யாவையும்,
சுட்டு எரித்து என்னை காப்பாய்!
அஸ்திரம் சஸ்த்திரம் எதுவே ஆயினும்
அடங்கா ஊழிப் பெரும்பகை ஆயினும்
கத்தும் கடலாய்க் கொடுமை சூழினும்
சத்திய சாயி நித்தம் காக்க!
எண்ணும் போதும் இயங்கும் போதும்
உண்ணும் போதும் உறங்கும்போதும்
பண்ணும் செயல்கள் யாவிலு மிருந்து
பலமுடன் பாபா பாங்குடன் காக்க!

சுழலும் கோள்கள் செயலால் என்னைச்
சூழும் துயரம் நீக்கி அருள்க!
பழகும் காலம் எதுவே ஆயினும்
பரிவுடன் சாயி என்னைக் காக்க!
கசிந்து உருகிக் கன்னித் தமிழில்
கடவுள் மீது கவிகள் பாட
இசைந்து சாயி தமிழாம் அமுதை
இயல்பாய் எனக்கு என்றும் அருள்க!
பிறந்த கடனை முழுமை செய்யச்
சிறந்த குருஉன் பாதம் பணிந்தேன்!

நிறைந்த வாழ்வு யாது ஆயின்
நிறைவு செய்யும் கடமை ஆகும்!
செய்ய வேண்டிய கடமை யாவும்
செம்மை யாகச் செய்ய அருள்வீர்!
மங்கல நலன்கள் யாவும் தந்து
மனையறம் விளங்க மாயி அருள்வீர்!
உங்கள் அருளால் கவசம் பாடி
உங்கள் அருளை யாசிக் கின்றேன்!
உற்ற வழிகள் யாவும் அருளிச்
சத்திய சாயி எம்மைக் காப்பீர்!

பூட்டி மந்திர் வாசா போற்றி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணியம் அருளும் நேசா போற்றி!
வாட்டும் துயரம் தீர்ப்பாய் போற்றி!
வளங்கள் நலங்கள் அருள்வாய் போற்றி!
அன்னை தந்தை ஆனாய் போற்றி!
அன்புக் குருவே உன்பதம் போற்றி!
உருகும் பக்தர் உணர்வே போற்றி!
உண்மை ஞான ஒளியே போற்றி!
திருவாம் உன்பதம் போற்றி! போற்றி!
தெய்வ வடிவே போற்றி! போற்றி!

சற்குரு நாதா சரணம்! சரணம்!
சச்சிதா னந்தா சரணம்! சரணம்!
அற்புத ஒளியே சரணம்! சரணம்!
அன்பே அருளே சரணம்! சரணம்!
நித்திய சாயி சரணம்! சரணம்!
நிர்மல வடிவே சரணம்! சரணம்!
பொற்பதம் பணிந்தோம் சரணம்! சரணம்!
புண்ணிய ரூபா சரணம்! சரணம்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ தத்தாத்ரேய பாவனி

ஜய யோகீஸ்வர தத்த தயாளா,
ஜகத்தினை ஆக்கிய மூலாதாரா
அத்ரி அநுசூயா கருவியாய் கொண்டாய்,
ஜக நன்மைக்காகவே அவதரித்தாய்
பிரம்மா, ஹரிஹரரின் அவதாரம்,
சரணாகதர்களின் பிரணாதாரம்
அந்தர்யாமி,சத்சித் ஆனந்தன்,
பிரசன்ன சத்குரு இருதோளுடையன்
அன்னபூரணி யை தோளில் வைத்தாய்,
சாந்தி கமண்டலம் கரமேந்தினாய்
நாலு,ஆறு பல தோளுடையான்,
அளவிலா ஆற்றலுடைய புஜமுடையான்
நின்சரண் புகுந்தேன் அறியாமூடன்,
வாரும் திகம்பரா ! போகுதே பிராணன்
அர்ஜுனனின் தவக்குரல் கேட்டு கிருதயுகத்திலே,
அக்கணமே பிரசன்னம் ஆனாயே
அளவிலா ஆனந்தம் சித்தி அளித்தாய்,
முடிவில் பரம பத முக்தியும் அளித்தாய்
இன்று எனக்கருள ஏன் இத்தனை தாமதம்?
உனையன்றி எனக்கில்லை புகலிடம்
விஷ்ணுசர்மா பக்திக்கிரங்கினாய்,
அவனளித்த சிரார்த்த உணவு அருந்தி ரட்சித்தாய்
ஜம்ப அசுரனால் தொல்லை தேவருக்கே,
தயை புரிந்தாய் நீ அமரருக்கே
மாயை பரப்பி திதிசுதனை,
இந்திரன் கரத்தால் வதம் செய்வித்தாய்
அளவிலா லீலைகள் புரிந்தாயே,
அவற்றை வர்ணிக்க இயலுமோ சிவரூபனே
நொடியில் ஆயுவின் புத்திர சோகம் போக்கினாய்,
மகனை உயிர்ப்பித்து பற்றற்றவனாக்கினாய்
சாத்யதேவ,யது,பிரஹ்லாத,பரசுராமருக்கே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதித்தாய் நீ ஞானோபதேசமே
அளவிலா அருள் ஆற்றல் உடையோனே.
என் குரல் கேட்க ஏன் மறுத்தாயே
உன் தரிசனம் காணாமல் நானுமே.
இறுதி காணேன்.வாரீர் இக்கணமே
த்விஜஸ்திரீயின் அன்பை மெச்சினாயே.
பிறந்தாய் நீ அவளின் மகனாகவே
ஸ்மர்த்துகாமி. கலியுக கிருபாளனே.
படிப்பறியா வண்ணானை உய்வித்தாயே
வயிற்று வலியில் துடித்த அந்தணனை காத்தாயே
வல்லபேசனை கயவ காலனிடமிருந்து காத்தாயே
என்னைப்பற்றிய அக்கறை உனக்கில்லையே.
என்னை நினைப்பாய் ஒரு முறையேனுமே
தழைக்கச் செய்தாயே உலர்ந்த பட்டமரம்.
என்னிடம் ஏன் இத்தனை உதாசீனம்
முதிய மலட்டு பெண்ணின் கனவினையே.
சேய் அளித்து பூர்த்தி செய்தாயே
அந்தணனின் வெண்குஷ்டம் நீக்கினாயே.
அவன் ஆசைகளை நிறைவு செய்தாயே
மலட்டெருமையை பால் சொறிய வைத்தாய்.
அந்தணனின் தரித்திரம் போக்கினாய்
அவரைக்காய் பிச்சையாய் ஏற்றாய்.
அந்தணனுக்கு தங்கக்குடம் அளித்தாய்
பதி இறந்த பத்தினியின் துயர் துடைத்தாய்.
தத்தன் உன்னருளால் உயிர்த்தெழுந்தான்
கொடூர முன்வினையைப் போக்கினாய்.
கங்காதரனின் மகனை உயிர்ப்பித்தாய்
மதோன்மத் புலையனிடம் தோற்றனரே.
பக்த திரிவிக்ரமரை ரட்சித்தாயே
பக்த தந்துக் தன்னிஷ்டப்படியே.
ஸ்ரீ சைலம் அடைந்தான் இமைப்பொழுதிலே
ஒரே நேரத்தில் எடுத்தாய் எட்டு ரூபங்களே.
உருவமற்றும் பலரூபமுடையவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரிசனம் பெற்று தன்யமானரே.
ஆனந்தம் அடைந்த உன் பக்தருமே
யவனராஜன் வேதனை நீக்கினாயே.
ஜாதிமத பேதம் உனக்கில்லையே
ராம கிருஷ்ண அவதாரங்களிலே,
நீ செய்த லீலைகள் கணக்கில்லையே
கல்,கணிகை,வேடம்,பசு,பட்சியுமே.
உன்னருளால் முக்தி அடைந்தனரே
நாமம் நவிலும் வேஷதாரியும் உய்வானே.
உன் நாமம் நல்காத நன்மையில்லையே
தீவினை,பிணி துன்பம் தொலையுமே.
சிவன் உன் நாமம் ஸ்மரித்தாலே
பில்லி, வசிய தந்திரம் இம்சிக்காதே.
ஸ்மரணையே மோட்சம் தந்திடுமே
பூத,சூனிய,ஜந்து அசுரர்,ஓடிடுமே.
தத்தர் குண மஹிமை கேட்டதுமே
தத்தர் புகழ் பாடும் தத்த பவானியையே.
தூபமேற்றி தினம் பாடுபவனுமே
இரு லோகத்திலும் நன்மை பெறுவானே.
சோகம் என்பதை அறியானே
யோக சித்தி அவன் அடிமையாகுமே.
துக்க தரித்திரம் தொலைந்திடுமே
ஐம்பத்திரு வியாழக்கிழமை நியமமுடனே.
தத்த பவானி அன்புடன் படித்தாலே
நிதமும் பக்தியுடன் படித்தாலுமே.
நெருங்கான் அருகில் காலனுமே
அநேக ரூபமிருந்தும் இறை ஒன்றே.
தத்துவமறிந்தவனை மாயை அண்டாதே
ஆயிரம் பெயரிருந்தும் நீ ஒருவனே.
தத்த திகம்பரா நீ தான் இறைவனே
வந்தனம் உனை செய்வேன் பலமுறை நானுமே.
வேதம் பிறந்தது உன் மூச்சினிலே
சேஷனும் வர்ணித்து களைப்பானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல ஜன்மமெடுத்த பாமரன் எப்படி வர்ணிப்பேனே
நாமம் பாடிய அனுபவம் திருப்தி தந்திடுமே.
உனை அறியாமூடன் வீழ்ந்திடுவானோ
தவசி தத்வமசிஅவன் இறைவனே.
பாடு மனமே ஜயஜயஶ்ரீ குருதேவனே

| | |
|---|---|
| பாவனி | - ஐம்பத்திரு பாட்டு வரிகள் |
| ஸ்மர்த்துகாமி | - ஸ்மரித்தவுடன் ஓடி வருபவர் |
| திதிசுதன் | - ராக்ஷஸன் |
| அர்ஜுனன் | - ஸஹஸ்ரார்ஜுனன் |
| த்விஜ | - இருமுறை பிறவி எடுத்த அந்தண வைசிய க்ஷத்திரிய குலத்தோர் |

## சாயிபாபாவிற்கு நிவேதனம்

ஓ! சாயிபாபா ஏற்றருள்வாயே - நான்
அன்புடன் அளித்திட்ட உணவினையே
பாசமுடன் நல்ல இனிப்புகள் செய்தேனே.
பக்தியுடன் பல பண்டங்கள் சமைத்தேனே.
பால்கோவா, பாயாசம், பொங்கல் நீ கேட்டாலே
தருவிப்பேன் உனக்கு உணவு அளிக்கையிலே
கங்கை,யமுனை, காவிரியின் நீர் தருவேனே.
அறுசுவை உணவு, அன்னமும் அளிப்பேனே.
கொழுந்து வெற்றிலை, பாக்கு, கிராம்புடனே,
ஏலமும் சேர்த்து தாம்பூலம் அளிப்பேனே.
வியாழக்கிழமை சாயி பூஜை செய்வேனே.
தினமும் சாயிநாதருக்குணவு அளிப்பே னே.
சாயியின் அருளால் ஆனந்தம் பெருகிடுமே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாயிபாபாவின் ஆரத்தி

ஆரத்தி எடுப்போம் ஸ்ரீசாயி உமக்கே
ஆரத்தி எடுப்போம் வியாழக்கிழமையுமே
பரமானந்த சுகத்தினை அளிப்பாயே
தயையுடன் எமக்கருள் செய்வாயே
துக்க, சோக, சங்கடம் தீர்த்தருள்வாயே
வாழ்வில் ஆனந்தம் பொங்க அருள்வாயே
என் மனதில் உன்னை நினைத்ததுமே
அக்கணமே வந்து அநுபவம் தந்தாயே
உந்தன் திருஉதி நெற்றியில் இட்டதுமே
அனைத்து தொல்லைகள் தொலைந்தனவே
சாயி நாமமே தினமும் ஜபித்தோமே
நொடியிலும் உம்மை யாம் பிரியோமே
வியாழக்கிழமை உன்னை பூஜித்தோமே
தேவா! உன் கிருபையால் நலம்அடைந்தோமே
ராம, கிருஷ்ண, ஹனுமான் ரூபத்திலே
அழகு தரிசனம் எமக்களிப்பாயே
பல மத முறையில் பூஜித்துமே
பக்தர் குறை கேட்டருள் புரிவாயே
சாயியின் நாமம் வெற்றி நல்கிடுமே
தேவா! வெற்றியின் அர்த்தம் நீதானே
சாயிதாஸனின் ஆரத்தி பாடுபவனுமே
சர்வ சுகம், சாந்தி வளம் பெறுவானே. (ஆரத்தி)

## நாம ஸ்மரணை

ஹரே ராம் ஹரே ராம் - ராம் ராம் ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண - கிருஷ்ண
கிருஷ்ண ஹரே ஹரே
ஹரே சாயி ஹரே சாயி- சாயி சாயி ஹரே ஹரே
ஹரே பாபா ஹரே பாபா - பாபா பாபா ஹரே ஹரே
ஹரே தத்த ஹரே தத்த - தத்த தத்த ஹரே ஹரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாயி பிரார்த்தனை

குருவாய் உந்தனைத் தொழுதேன் சாயிநாதா
உன்னருளை எனக்குத் தருவாய் சாயிநாதா
என் வாழ்விற்கு வழிகாட்டுவாய் சாயிநாதா
இன்ப துன்பம் நிறைந்த வாழ்வின் ஒளியாவாய் சாயிநாதா
வியாழன் தோறும் விரதம் இருந்தேன் சாயிநாதா
உலகப்பற்றை விட்டொழிக்க அருள்வாய் சாயிநாதா
குருவாயூரப்பனை உன்னிடத்தில் கொண்டுள்ள சாயிநாதா
கோமதி அம்மனின் அருமை மகனே சாயிநாதா
உந்தன் சரித்திரம் படித்திட அருள்வாய் சாயிநாதா
உந்தன் பாதகமலம் சரண் அடைந்தோம் சாயிநாதா
எனக்கு விஜயம் அருள்வாய் சாயிநாதா.

## ஸ்ரீ சாயிநாதர் அஷ்டகம்

1. அம்பிகை பெற்ற ஐங்கரனை துதித்தெழுதும் அடியேனின் ஐயன் சாயிநாதனே! அத்ரி அநுசூயா ஈன்ற மும்மூர்த்தி சேர் தத்த அவதாரமே! வாசுகியால் கடையப்பெற்று அமுது பொங்கிய தலம் ஷீர்டியில் எழுந்தருளிய பரப்ரஹ்மமே, கற்பகத்தருவே! கலியுகத்தின் கண்கண்ட தெய்வமே, ஸ்ரீ பாத வல்லபனே! நரஸிம்ஹ சரஸ்வதியே, அக்கல்கோட் ஸ்வாமி ஸமர்த்தனே! பக்தனின் இன்னல் போக்கும் அனாத ரட்சகனே, அல்லாவின் புதல்வனே, இடர் நீக்கி, துயர் துடைத்து நலம் நல்க விரைந்து வந்து அருள்வாய் புண்ய நகர் ஷீர்டி வாஸ சாயிநாதனே.

2. அனுதினமும் சாயிநாமமே பிரதானமென்று எனக்கு விதித்த கடமையும் மறந்து, உன்னையே நினைந்து, உன் பாதமே பணிந்து பலவித பூஜைகள் செய்தேன். உன் திருக்கதை படித்தேன். திருநாமம் ஜபித்தேன். உன் சொற்படி அன்னதானமிட்டேன். பிறர் மனதை நோகடித்து அறியேன் இத்தனை செய்தும் இக்கணம் இன்னல் வந்திட யாம் செய்த பிழைதாம் யாதென உரைத்திடுவாய். பக்தி வேடம் பூண்டு போலி நாடகம் புரியும் அற்பனென்று என்னைப் புரிந்திட்டாயா? குழம்பித் தவிக்கும் எனக்கு விரைந்து வந்து அருள்வாய் புண்யநகர் ஷீர்டி வாஸ சாயிநாதனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. வசீகர அருளால் பக்தரை உன் பக்கம் காணச் செய்தாயே. கோடானு கோடி பக்தர் உன் பதம் பற்றியதால், அடியேனுக்கு இரங்கிட உமக்கு நேரமில்லையா? மனமில்லையா? நொடிப் பொழுதும் உன்னைப் பிரியேன். இமைப்பொழுதும் உன்னை விலகிடேன். என் பக்தியில் நீ கண்ட பிழையறியேன் சாயி! முன்வினையோ! தீவினையோ? நானறியேன். தீவினையைத் தீக்கிரையாக்க உன் தயவொன்று போதுமே. கருணா சாகரா! தாயிலும் மேலான தயை மனம் கொண்டவனே. சேய் அழுதால் தாங்குமோ உன் மனமே? உன் நாமமே பிதற்றும் எனக்கு விரைந்து வந்து அருள்வாய் புண்ய நகர் ஷீர்டி வாஸ சாயிநாதனே.

4. கொடும் விட நஞ்சு கொண்ட அரவம் தீண்டியும், ஷாமாவை காலனின் பிடியிலிருந்து காத்தாயே ! சர்வேஸா! சேஷசாயி! என்னைக் காத்தருள ஏனிந்தத் தயக்கம்? கண்கள் நீர் சொறிந்து காய்ந்தும் போனதே, நாவும் சாயிநாமம் பாடியே உலர்ந்தும் போனதே. என் மேல் நீ கொண்ட கோபம் அறியேனே. உன் நினைவன்றி வேறு எதையும் நினைந்திடேனே. நீயே அடைக்கலமென்று தஞ்சமும் அடைந்தேனே. என் பக்திக்கிரங்கி இக்கணமே என் கண் முன்னே தோன்றி வேண்டிய வரமளித்திட விரைந்து வந்து அருள்வாய் புண்ய நகர் ஷீர்டி வாஸ சாயிநாதனே.

5. தூய மனதில் நான் உன்மேல் கொண்ட பக்தி சத்தியமே. உன் திருக்கதை கேட்டு சாயி பக்தனாகி, சாயி பித்தனாயும் ஆனேனே. உன் பதமலரில் பக்தியோடு விழுந்து கிடந்தேனே. நீ என்னைப் பாராமல் போனால் அது நியாயமில்லையே. என் துயர் நீ போக்காவிடில் உலகம் நம்மைக் கேலி பேசுமே, சாயி உன்னிடம் இரங்கவில்லை, உன் பக்தி ஒரு நாடகமே என்று என்னைத் தூற்றுமே. சாயி பக்தனுக்கா துயரம்? உலகம் உன்னையும் பழிக்குமே, உலகம் உன்னைப் பழித்தால் என் மனம் தாங்காதே. பழிச் சொல்லிலிருந்து காப்பாற்றி பக்தனையருள விரைந்து வந்து அருள்வாய் புண்யநகர் ஷீர்டி வாஸ சாயிநாதனே.

6. ஏதுமறியோ மூடனாய், அறிவிலியாய், இறைவனை அறியாமல் திரிந்த என்னை உன் பாதம் காணச் செய்து பக்தனாக்கினாய். எம்மதமும் சம்மதம் என்ற சர்வதத்வ போதகனே. இக்கணம் எனக்கு வந்த துயர் நீ போக்காவிடில் நாஸ்திகம். ஆனந்த எக்காளமிடுமே. தெய்வம் பொய்யானதே என்று எள்ளி நகையாடுமே. பக்தி நம்பிக்கையை ஏசிடுமே. நீ பொய்யில்லை. நீ சத்தியமென்று நான் அறிவேனே. உண்மையாய் உலகமுழுதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபிக்கின்றாய் என்று பெருமையுடன் பறைசாற்றும் எனக்கு விரைந்து வந்து அருள்வாய் புண்ய நகர் ஷீர்டி வாஸ சாயிநாதனே.

7. அக்னி ஹோத்ரியாய் துனியை எரிய விட்டு, அரும் உதியால் பக்தனின் பிணி, துயர் போக்கும் துவாரகமாயி வாழ் ஆனந்த சாயி! பஞ்சபூதமும் உந்தன் கையசைவிலே, விரல் சொடுக்கில் விதியையே மாற்றும் விஸ்வ நாதனே, பிரம்ம ஸ்வரூபனே! உம்மையன்றி யாரையும் அறியாத என் வேதனையைக் போக்கிடுவாய். துன்பக்கடலில் தத்தளிக்கும் எமக்கு தோணியாய் வந்திடுவாய். என் விண்ணப்பங்களை விருப்பமாய்க் கேட்டு என் இன்னல் களைந்து இன்பம் தருவாய். ஈடில்லா செல்வமும், வெற்றியும், பிணியிலா வாழ்வும், இறையருளும், நற்கதியும் பெற்றிட விரைந்து வந்து அருள்வாய் புண்ய நகர் ஷீர்டி வாஸ சாயிநாதனே.

8. யாமிருக்க பயமேன்! நம்பிக்கை, பொறுமைமிக்க பக்தி கொள் என்றாய். எத்தனை காலம் பொறுமை காப்பேன். பொறுமைக்கொரு எல்லை உண்டே. நான் உயர் கடவுள் இல்லையே. ஜனன மரணம் எய்தும் அற்ப மானிடப் பிறவியே. காலம் கடந்து விட்டதே. என்னையும் தாண்டி பலர் முன் சென்று விட்டனரே. கவலையில் நெஞ்சும் கனக்கிறதே. தோல்வியில் துவண்டு, வேதனையில் மாண்டு தூண்டிலிட்ட புழுபோல் துடிதுடிக்கும் பக்தனுக்கிரங்கி வேண்டிய பதினாறு செல்வமிக்க வளமான வாழ்வும், சீரும் சிறப்பும், ஆரோக்கியம் ஆயுளும், புகழ் தரும் வெற்றியும், தனதானம் அனைத்தும் இனிதே தந்திட விரைந்து வந்து அருள்வாய் புண்யநகர் ஷீர்டி வாஸ சாயிநாதனே.

ஸ்ரீ சாயிநாதருக்கு அர்ப்பணம்




It is said that this photo was taken one day before mahasamadhi of Sri Sai Baba Maharaj



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ சாயிபாபாவின் உறுதி மொழிகள்
## (11 வாக்குகள்)

1. ஷீர்டியில் காலடிபடும் பக்தனுக்கு வரும் ஆபத்து விலகி விடும்.
2. என் சமாதியின் படி ஏறுபவனின் அனைத்து துக்கங்களையும் போக்கு வேன்.
3. இவ்வுலகை விட்டு என் பூதவுடல் மறைந்தாலும் பக்தன் அழைத்தால் ஓடோடி வருவேன்.
4. திட பக்தி, நம்பிக்கை, விசுவாசத்துடன் யாசிப்பவன் ஆசையை என் சமாதி பூர்த்தி செய்யும்.
5. இன்னும் நான் உயிருடன் இருக்கிறேன் என்று எப்பொழுதும் உணரவும். இதனை சத்தியமென்றறிந்து அனுபவம் பெறுவீர்.
6. என்னை சரணடைந்தும் வெறும் கையோடு திரும்பினான் என்று எந்த பக்தனாவது இருந்தால் அவனை எனக்குக் காண்பியுங்கள்.
7. பக்தர் என்னை எப்படிப்பட்ட பக்தியுடன் உணருகிறானோ, அப்படிப்பட்ட அனுபவங்கள் அவனுக்குத் தருவேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BIO DATA

**1. NAME IN FULL:-** SUBRAMANIAM RATNASINGHAM

**2. DATE&PLACE OF BIRTH:-** 9/2/1935.JAFFNA

**3. EDUCATIONAL QUALIFICATION:-** G.C.E.(O/L)

**4.TECHNICAL& PROFESSIONAL QUALIFICATION**

(A) 1955-1960 APPRENTICE DRAUGHTSMAN M/S THURAIRAJAH ASSOCIATES COLOMBO.

(B) 1960-1961 DIPLOMA IN DRAUGHTSMANSHIP KATUBEDDA CAMPUS-MORATUWA.

(C) 1961-1964 DIPLOMA IN ARCHITECTURE KATUBEDDA CAMPUS-MORATUWA.

(D) 1964-1966 PART TIME SENIOR LECTURERIN DRAUGHTSMANSHIP AND BUILDING CONSTRUCTION AT BUDDHIST UNIVERSITY COLLEGE-COLOMBO.

(E) 1964-1979 SPECIAL GRADE DRAUGHTSMAN. STATE ENGINEERING CORPORATION SRILANKA.

(F) 1978-1990 PART TIME (WEEK END) DIRECTOR BUILDING TECHNOLOGICAL INSTITUTE JAFFNA.

(G) 1980-1985 DRAWING OFFICE ASSISTANT STATE ENGINEERING CORPORATION OF SRILANKA.

(H) 1986-1992 DESIGNER ARCHITECT M/S SAMARASINGHA CONSULTANCY CHARTERED ARCHITECT COLOMBO.

(I) 1993- TO DATE CONSULTING ARCHITECT 'WEBUILD COLOMBO AND JAFFNA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சுப்பிரமணியம் இரத்தினசிங்கம்
## அவர்களின்
## மண்ணில் நிறைந்த வாழ்வு

ஈழத்திருநாட்டின் வடபால் யாழ்.இசைக்குப் பரிசான யாழ்ப்பாணப் பட்டணம் இருக்கிறது. தமிழ் குடிமன்னர்களால் முற்காலத்தில் ஆட்சி செய்யப்பட்ட இப்பட்டணம் பின்னர் போர்த்துக்கீச அந்நியரால் கைப்பற்றப்பட்டது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கீசர் தம் வாழ்வுக்கேற்ற இடமாக தெரிவு செய்த சுண்டுக்குளி நிலப்பரப்போடு அண்டியுள்ள பசுமையான நிலப்பரப்பே பாண்டியன்தாழ்வு ஆகும். பாண்டியன்தாழ்வு என்று பெயர் இந்நிலப்பரப்புக்கு என்ன? தமிழ் அரசர்கள்ஆட்சி செய்த காலத்தில் தென்னிந்திய பாண்டிய அரசுக்கும். யாழ்ப்பாண அரசுக்கும் மிக நெருங்கிய சம்பந்த உறவுகள் ஏற்பட்டிருந்தது. அவ்வாறான உறவின் காரணமாக இங்கு வந்து குடியேறியவர்களால் சூட்டப்பட்ட பெயரே பாண்டியந்தாழ்வு எனப்படுவதாகும். இச் சரித்திர பிரசித்தி பெற்ற மண்ணில் வாழ்ந்த உயர் குலத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் இரத்தினம் தம்பதியருக்கு புத்திரனாக பிறந்தார். ஆரம்பப் படிப்பை யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியில் படித்தார். திறமை மிக்கவரான மகன் கல்லூரிப் படிப்பில் உயர் தேர்ச்சி பெற்று மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் சேரும் வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டார். அங்கு கற்றுப் பட்டமும் பெற்றுக்கொண்டார். தந்தை, தாயார் மிகுந்த மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினார், இளைஞரான தனது மகனுக்கு ஆசிரியை மல்லிகா என்பவரைத் திருமணம் செய்து வைத்தனர்.

இவர்கள் வாழ்வின் இன்பக் கனிகளாக தயாபரன், கிரிதரன், சத்தியவாணி, சுதர்ஷனி, சாயினி, சஞ்சீவன் ஆகியோர் இப்புவியில் வந்து பிறந்தனர்.

அமரர் இரத்தினசிங்கம் Engineer ஆக State Engineering cop.col- 2ஆரம்பித்து ஏறத்தாழ 40 வருடங்கள் பணியாற்றினார். அத்துடன் யாழ்ப்பாணத்தில் We Build எனும் கல்வியகத்தை நடத்தி பல மாணவர்களை Draughtsman,Quantity Surveyor ஆக உருவாக்கிய பெருமை அவரைச் சேரும்.

இல்லற வாழ்வில் பெற்றெடுத்த மகவுகட்கு இல்லறத்துணைகளாக சத்தியவாணிக்கு சற்குணராசா, தயாபரனுக்கு சுதர்மா, சுதர்ஷனிக்கு ஜீவகன், சாயினிக்கு நீலகரன், சஞ்சீவனுக்கு சங்கீதாவையும் இணைத்து வைத்து அவர்களின் மூலம் சக்திக்கீரிவன், கவிநயா, கிரிஷிகேசன், சுவேதா, சேயோன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்திவிதுஷன், சயானா, லக்சனா எனும் பேரப்பிள்ளைகளைப் பெற்று தன் குடும்ப வாழ்வில் இன்புற்றிருந்தார்.

என்னதான் வாழ்வில் கிடைக்க வேண்டிய சகல சௌபாக்கியங்களைப் பெற்றுமென்ன? மரணத்தை வெல்ல எவராலும் முடியாது. அதற்கு அமரர் இரத்தினசிங்கம் என்ன விதிவிலக்கா? அன்பு மனைவியுடனும், பெற்ற பிள்ளைகளுடனும், மருமக்களுடனும், பேரப்பிள்ளைகள், உறவுகள், அயலவர்களுடனும் கொஞ்சிக்குலாவிப் பேரின்பம் கண்டவர். இன்று இம் மண்ணில் இல்லை. இறைவன் வகுத்த விதியின்படியே வாழ்க்கையாகும். சொல்லாமல் வரும் கூற்றுவனுக்கு எல்லாரும் ஒரு நாள் பணிந்தே ஆகவேண்டும். அன்னார் புரட்டாதி மாதம் 12ஆம் திகதி (28.09.2016) புதன்கிழமை அபரபஷ திரயோதசி திதிதனில் 3.45 பின்னேரம் இவ்வுலக வாழ்வை விட்டு எல்லாம் வல்ல ஷீர்டி சாயி பாதக்கமலங்களைச் சென்றடைந்தார்.

ஊரும் உறவுகளும் ஒருங்கே போற்றிய குடும்பத்தின் குலவிளக்காய் திகழ்ந்தவர் இவ்வுலக வாழ்வில் பந்த பாசங்களைக் கலங்கவிட்டு நீள் பயணம் சென்று விட்டார்.

இதுவே மனித வாழ்வின் முடிவு. தாயின் கருவில் உருவாகி மண்ணில் வாழ்ந்து தனக்கென வாழ்வியல் எச்சங்களை இம்மண்ணில் உருவாக்கி அழிவதும் உண்டு. பிஞ்சில் போவதும், இளமையில் எதுவும் அனுபவியாது போவதும், தனியனாய் இருந்து போவதும், முதுமையில் போவதும் அவர்களுக்கு இறைவன் அளித்த விதியாகும். அமரர் இரத்தினசிங்கம் இதில் கூறப்பட்ட முதல் வழியில் இறைவனை அடைந்தவர். முழுமையான நிறைவோடு இப்புவியில் வாழ்ந்து வாழ்வின் இன்பங்களையும் துன்பங்களையும் அனுபவித்து குடும்பத்திற்கு தன்னாலான சேவையாற்றி இம்மண்ணக வாழ்வை நிறைவு செய்துள்ளார். எனவே நாம் அவரின் பிரிவுக்காக கவலை கொள்ளாது. அவரை நாளும் நினைத்து எம் வாழ்வினைத் தொடர்வோமாக.

"குடம்பை தனித்தொழிய புட்பறந் தற்றே
உடம்பொடு உயிரிடை நட்பு" - வள்ளுவர்

சாந்தி! சாந்தி! சாந்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கே சென்றீர்கள் என் இனியவரே!

1963ஆம் ஆண்டு கரம் பற்றிய நாள் முதல் கலங்கவில்லை. என் கண்கள் சீர் பெற்று வாழ்வு தந்து பார்போற்ற வாழவைத்தீர்கள்.

மானிட வாழ்வில் பிறந்தவர்கள் அனைவரும் என்றோ ஒரு நாள் இறக்க வேண்டும். என்பது இறைவன் நியதி. இருந்தாலும் அரை நூற்றாண்டு காலத்துக்கும் மேலாகவே எனக்கு உயிர்த்துணையாக இருந்த கணவரின் பிரிவுத்துயரை எவ்வாறு தான் என்னால் ஜீரணிக்க முடியும்.

செய்யும் தொழிலே தெய்வம் எனக்கருதி செய்யும் தொழிலால் பிறர் போற்ற உயர்வும் அடைந்தார். அதேபோல் மக்களையும் பிறர் போற்றி நிற்க அவர்களுக்குச் சிறந்த கல்வியூட்டி வளர்த்தாளாக்கி விட்டார்.

எத்தனை வருடம் ஒன்றாய் சேர்ந்து வாழ்ந்திருந்தோம். அத்தனையும் மறந்து நீங்கள் சொல்லாமல் சென்றதேனோ. ஆறுதல் கூற எனக்கு ஆயிரம் பேர்கள் வந்தாலும் என் வாழ்நாள் பூராகவும் மறக்க முடியாத அவரின் நினைவலைகளைச் சுமந்துகொண்டு அவர்தம் ஆத்மசாந்திக்காக சீரடி சாயி பாதங்களைப் பணிகின்றேன்.

*என்றும் உங்கள்*
*நினைவுடன் வாழும்*
*அன்பான மனைவி மல்லிகா (ரீச்சர்)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதையும் தாங்கும் இதயம் எங்கள் ஆசை அப்பா

"உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது அப்பா..
என்றும் எங்கள் இதயத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கும் அன்பு அப்பா....."

அம்மா அப்பா என்ற தமிழ்ச் சொல்லால் உயிரும் மெய்யுமாய் உயிர் மெய்யாய் எங்களையும் அப்படி உயிர் மெய்யாய் வளர்த்தீர். எந்த பிறவிக்கும் வாய்க்காத வரம் உங்களுக்கு மக்களாகப் பிறந்தது.

துன்பம் என்ற சொல்லை நீங்கள் பிரியும் வரை அறியவில்லை இன்று வரை அப்பா.....

எங்கள் இதயம் உங்கள் பிரிவை ஏற்கவில்லை அப்பா....

நடந்தவை கனவாகப் போகாதோ? மீண்டும் ஒருதரம் வாய்விட்டு அழைத்து எங்களை அரவணைக்க மாட்டீர்களா? அப்பா..... நீங்கள் எங்கள் சிறந்த குரு, தெய்வம், வழிகாட்டி அப்பா.....

இனி நாங்கள் எங்கே எப்போது உங்கள் திருமுகத்தைக் காண்போம் அப்பா....

நீங்கள் எங்கள் இதயத்தில் குடிகொண்ட தெய்வம் அப்பா...

நீங்கள் இல்லையென்று நாங்கள் கவலை கொள்ளமாட்டோம். உங்களை எப்போதும் உள்ளம் உயிர் இவற்றால் உயிர் உள்ளவரை எங்கள் இதயத்தில் வைத்து தினந்தோறும் பூஜிப்போம் அப்பா. உங்கள் ஆத்மா சாந்தியடைய ஷீரடி சாயி பொற்பாத கமலங்களில் உங்களைக் காணிக்கையாக இட்டு தினமும், எங்கள் அன்பு மலர்களால் பிரார்த்திப்போம் அப்பா........

*என்றும் உங்கள் நினைவுடன் வாழும்*
*அன்பான பிள்ளைகள்*
*தயாபரன்* (U.K), *அமரர் கிரிதரன், சத்தியவாணி*(Canada),
Dr. *சுதர்ஷனி, சாயினி* (UK), *சஞ்சீவன்* (Accountant)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## To My Dearest Appa

I am very saddened by your sudden departure from us. You were the best father in the world. You gave us everything we wanted. you sacrificed your happiness for your family.

You made us successful good people. You are always in my mind. I still remember the days, i used to polish your car and scooter and bring to the front for you to drive. I am very sorry not to follow you to your last journey but I cannot bring myself to put the fire on you. I know it's the tradition but I can't do that to you. I want you to live in my memories. You may have left us physically butt I feel you are with me all the times. maybe one day we will meet again.

***Loving Elder Son (UK)***
***Thayaparan***

## எங்கள் வாழ்வின் வழிகாட்டி மாமா

எங்கோ பிறந்த நாம் ஒன்றாகக் கூடி வாழ்ந்தோம் மாமா
இங்கேயே பிறந்தது போல் உணர்வுடனே நாமிருந்தோம் - மாமா
நன்றாக நாம் வாழும் வாழ்வு கண்டு மகிழ்ந்தீர்கள் மாமா.....
என்றோ ஒரு ஜென்மம் தொடர்வது போல் வாழ்ந்திருந்தோம்- மாமா
இன்றோடு எம் உறவு பூவுலகில் முடிந்தாலும்
நெஞ்சோடும் நினைவோடும் எந்நாளும் தொடர்ந்திருக்கும் மாமா
சுற்றமெல்லாம் மறந்து நீங்கள் வேற்றுலகம்
சென்றாலும் நித்தம் உங்களை நினைந்து இவ்வுலகில் வாழ்ந்திருப்போம் - மாமா

*மருமகன்மார், மருமகள்மார்,*
*சுதர்மா, சற்குணராசா, Dr.ஜீவகன், நீலகரன், சங்கீதா.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமகனின் புலம்பல்

என் ஆருயிர் மாமா இரத்தினசிங்கம் நீங்கள் இப்பூவுலகில் இரத்தினமாக மிளிர்ந்து சிங்கமாக எமக்குக் காவலாக கம்பீரமாக உறுதுணையாக வாழ்ந்த நாட்கள் என் மனதைவிட்டு அகலாது எனக்கு நீங்கள் என்றுமே மாமாவாக தென்பட்டதில்லை அப்பாவாகவே இருந்தீர்கள். தம்பி தம்பி என்று அன்பாக மகனைப்போல் என்னை அழைத்து கதைகள் கூறுவீர்கள். என்னிடம் யாருக்காவது மருத்துவ உதவி கேட்பதென்றால் கூட என்ன பக்குவமாக அணுகுவீர்கள்.

என் அருமை மாமா என்னை என் மனைவி, பிள்ளைகளை விட்டுச் செல்ல எப்படி உங்களுக்கு மனம் வந்தது. இனி உங்களை எப்பிறவியில் நான் காண்பேன். என் இரு விழிகளிலும் மனதிலும் என்றென்றும் நிறைந்து நிற்கின்றீர்கள். என்றென்றும் இறைவன் உங்களை தன் அருகாமையில் வைத்திருப்பதற்கே அழைத்து இருக்கிறார்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை மன்றாடி நிற்கின்றேன்.

*மருமகன்- Dr.ஜீவா*

## எங்கள் தாத்தா எங்களை விட்டு எங்கே சென்றீர்கள்!

எங்கள் தாத்தா மிகவும் அன்பானவர்
எங்கள் தாத்தா எங்கள் மீது இரக்கம் கொண்டவர்
எங்கள் தாத்தா 1935ஆம் ஆண்டு 02ஆம் மாதம் 09ஆம் திகதி பிறந்தார்
எங்கள் தாத்தா எங்கள் வீட்டுத் தலைவனாகக் கருதப்பட்டார்.
இவர் பாண்டியன்தாழ்வைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர்.
எங்கள் தாத்தா 2016ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 28ஆம் திகதி எங்களை விட்டு வேறு உலகம் சென்றதேனோ. உங்களின் அன்புப் பேரப்பிள்ளைகள் நாங்கள் கவலையில் தவிக்கின்றோம். காத்திருக்கின்றோம் தாத்தா......
எங்கள் தாத்தாவே எம்மோடு வாழ எப்போது மீண்டும் வருவீர்கள் தாத்தா?
உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் ஷீரடிசாயிநாதனைப் பிரார்த்திக்கின்றோம்.

*உங்கள் பிரிவால் வாடும் அன்பான பேரப்பிள்ளைகள்*
*சக்திகிரிவன், சக்திவிதுஷன், சுவேத்தா, கவிநயா, கிரிஷிகேசன், சயனா, சேயோன், லக்ஷனா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Message from Grand Son Sagi.....

### My Loving Grandpa!

You were not only my Grand Father, but You were my inspiration and you were my friend. Each time I close my eyes I receive flashbacks of the great memories we had together. Till this day I remember your voice over the phone as you would always start the conversation by saying my name with your sweet and loving voice "Sagi" if I could go in the past and fix things I would. I'm sorry I Couldn't make it to your funeral but I will make your dreams come true and attend University of Ryerson Ontario Studying to become a teacher. I will really miss you but you will always be remembered by your lovely grandson may your soul rest in peace. I will also promise to take care of your daughter also my beautiful and loving mother and the rest of our family.

***Your Loving Grand Son (Canada)***
***Sagi (Shakthigreevan)***

## Missing you lots my Grandpa

When I was small I missed so many things from you grandpa...
Missed bed time stories....
Missed play in the garden....
Missed holding your hand
Missed Special hugging &Kisses
Now that you're not here
any more my grandpa....
In life loved you dearly
In death I love you still
In my heart I hold a place
that only you can fill
you're always in my heart

***Loving Grand Daughter Swetha (UK).***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Please Accept My Heart Felt

Condolences for your loss. Our father was a great man and he will be truly missed and will always be remembered.

A beautiful Soul, Full of love and faith, ascended to heaven, away from us, but closer to baba's heart. Baba Says "You have to leave my son to live forever. Sleep now my beta. When you wake up all will be well, believe in what your fakir says"

creator created everythings out of nothingness and thus this we need to go back to nothingness to reach him. Crafty old man this Creator of ours, who has layered everything & plot every single moment of our life knows the best out of us. Always remember, he keeps those he loves dearly to his heart and that's where our father is.... Om Sai ram.

***Prasad.V.Iyer***
***Swami Madras Shirdi.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதலாகினேன் ஐயா!

பார்த்தேன் பார்த்ததில் பிடித்தது தங்களின் கருத்துக்கள். அதில் பிடித்தது கேள்விகளும் பதில்களும். பழகியதோ சிலகாலம் தான். வெளிநாடு சென்று பட்டப்படிப்புகள் பெற காதலும் கிடைத்தது. மருமகனாக கிடைகப் பெற்றவர் இரத்தினம் தான் (ஜீவா) இவர்களின் தொடர்பால் அறிமுகமானேன். (யாழ்.வைத்தியசாலையில்) டாக்டர் ஜீவா தன்னோடு தான் பழகிய தோடும் அல்லாது தங்களோடும் அறிமுகமாகக் கண்டு கொண்டதில் கசிந்து பேசினீர்கள். நல்ல அனுபவம் மிக்க வாழ்க்கையின் நிஜங்களை பல தரமான புத்தகங்கள் படித்தாலும் கிடைக்காது. வாழ்வின் மேடு பள்ளங்களின் ஆதாரங்களைத் துன்பம் கண்டு துவண்டு விடாதும் சந்தோஷம் கொண்டு துள்ளிவிடாமலும் கடந்து வந்த தன்மைகள் வாழ்க்கைக்கு பெரும் கருவூலங்கள்.

பொருள் நிறைய மூன்று பொன் நிறைய மூன்று, ஆறு பிள்ளைகளுக்கும் ஆவணசெய்து, வாழ்வின் வழிவகை காட்டி. ஏற்றமுற நடந்து காட்டிக்கொண்டு சந்தோஷங்கள் அறிய தந்த பொக்கிஷங்கள் தான்.

வாழ்ந்தாலும் பேசும் தாழ்ந்தாலும் பேசும் வையகத்தில் துவண்டு விடாது கடப்பது விலகினால் குளிரும், நெருங்கினால் சுடும் நீங்காது நெருங்காது இடையிருந்து குளிர் களைவது போல வாழ்வில் பழகிட வேண்டும் என்ற அனுபவத்தை எவ்வளவு இரத்தின சுருக்கமாக எடுத்துக் கூறிய வார்த்தைகள். பெரும் காதல் வார்த்தைகள். குருக்கள் உங்களோடு பேசிக்கொண்டதில் இளவயது காதலர்கள் எது ஏதோ எல்லாம் பேசிப்பேசிக் கொண்டதும் தெரியாது எண்ணிக் கொண்டதும் தெரியாது அனுபவிக்கும் காதலின் சொல்லுகளின் ஏகாந்தம் இனிது மாதிரி வாலிபத்தில் காதலின் இனிது மாதிரி. வயோதிபத்திலும் காதலாகி பேசிக்கொள்வது அனுபவம் மனதுக்கு பெரும் ஆறுதல்கள் அள்ளித்தரும் நாங்கள் இருவரும் பேசிக்கொள்வது தனிமைக்கு அறுதல் அளிக்கும் ஆனந்தம் தான். எதையும் சுவைத்துத் தான் சுவையறிய வேண்டுமேயொழிய, இன்னொருவர் சொல்லி ருசி அறிய முடியாது. புதுமனை புகுவிழா பூஜைகள் செய்வித்து பார்த்து மகிழ்ந்தீர்கள். பேரக்குழந்தைகளின் குறிப்புக்கள் பலன்களைப் பார்த்து சந்தோஷம் கொண்டீர்கள். குருக்கள் போன் பேசும் போது வையுங்கோ நான் எடுத்துக் கதைக்கிறேன் என்று செலவுக்கு சுருக்கம் சொல்வீர்கள். யாருக்கும் கிடைக்காது கிடைக்கப்பெற்றது எனது பாக்கியந்தான்.

*மஞ்சவனப்பதி முருகன் ஆலய V.S. குருக்கள்,*
*கொக்குவில் மேற்கு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொண்டாற்றகை பேணி சொற்காத்த சோர்விலாத ஆண்மகனைப் போற்றுவோம்

அமரர் சுப்பிரமணியம் இரத்தினசிங்கம் (J.P) அவர்கள் தனது எண்பத்து ஓராவது அகவையில் இயற்கை எய்தி இறையடி சேர்ந்து அமரத்துவம் அடைந்துள்ளார். அமரர் அவர்கள் யாழ்ப்பாணம் பாண்டியன்தாழ்வு என்னும் ஊரில் பிறந்து வாழ்ந்தவர். பஞ்ச ஈஸ்வரம் என்று சொல்லப்படுகின்ற திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், நகுலேஸ்வரம், முனீஸ்வரம், தொண்டீஸ்வரம் ஆகிய ஆதிச் சிவாலயங்களைக் கொண்டதும் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரால் "இராவணன் மேலது நீறு" என்று புகழப்பட்ட சைவத் தமிழ் அரசன் ஆண்டதுமான சிவபூமியே இலங்கை. இதற்கு நெற்றிக்கண் போலவும் சிவனின் நெற்றிக்கண்ணில் இருந்து அவதரித்த கந்தன் புகழ்பாடும் கந்தபுராண கலாசாரத்தைக் கொண்டதுமான யாழ்ப்பாணம் அமைந்துள்ளது. இந்நகருக்கு அண்மையில் அமைந்த ஊரே பாண்டியன்தாழ்வு. இவ்வூரானது நல்ல நிலவளம், நீர்வளம், மண்வளம் நிறைந்ததுடன், பல அரச திணைக்களங்களையும் பிரபல கல்லூரிகளையும் கொண்டமைந்தது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அமரர் இரத்தினசிங்கம் அவர்கள் கட்டட வரைபட நிபுணராகவும் அகில இலங்கை சமாதான நீதிவானாகவும் இருந்து மக்களுக்கு சேவை செய்ததோடு மட்டுமல்லாமல், இலங்கை மனித உரிமைகள் அமைப்பின் யாழ்.மாவட்ட நிர்வாகப் பணிப்பாளராகவும் பல ஆண்டுகள் இருந்து நீதியாகவும், நேர்மையாகவும் மக்களுக்கு சேவையாற்றியவர் என்பதை யாவராலும் மறக்க முடியாததாகும். இறைவனிடத்தே மிகுந்த பக்திகொண்ட இவர் சிந்தனை செயல் யாவற்றையும் அவனிடம் அர்ப்பணித்தவர். ஒருவரை நன்னிலைப்படுத்துவது அவரின் பரம்பரையும் வளரும் சூழலும் என்பார் அறிவியலாளர். அந்த வகையில் அமரர் இரத்தினசிங்கம் அவர்கள் இளமையிலேயே சூழலினாலும் பரம்பரைக் குணத்தினாலும் நல்லொழுக்கமும் நல்லறிவும் உடையவராக விளங்கியதில் வியப்பில்லை.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு"

ஆம், நேற்று இருந்தவர் இன்றில்லை இது உலக நியதி இதிலிருந்து யாரும் தப்பமுடியாது. காலதேவனுடைய ஆணையினால் இன்பம், துன்பம், பிறப்பு, இறப்பு ஆகியன சுழல் வட்டமாக வந்து போய்க் கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம்"

ஊழ்வினை முடிய உயிரது போகும். அரசன் ஆண்டி அனைவருக்கும் உரியது. படைத்த கடவுள் திருப்பி எடுப்பான் கொடுத்த கடனை எடுத்து முடிப்பான். இந்த வகையில் அமரத்துவம் அடைந்த இரத்தினசிங்கம் அவர்கள் எண்பத்து ஓராவது வருட உலக வாழ்க்கையில் தன் முத்திரையைப் பதித்துச் சென்றுள்ளார்.

நிலையற்ற உலகிலே நிலையாக வாழ்ந்த அமரர் அவர்கள் தமது சுற்றத்த வர்கள் யாவர்க்கும் உயர்ந்ததோர் இடத்தில் இருந்து அறிவைப் பயிலும் ஆசானாக அறிவுரை கூறும் நல்வழிகாட்டியாக அன்பின் இருப்பிடமாக வாழ்ந்தவர். அவர்தம் நாவில் வெளிப்படும் சொற்கள் யாவும் நல்லதோர் உத்தமரை உருவாக்கும். நற்சிந்தனையின் வெளிப்பாடாகவே அமைந்திருக்கும். தன் சமூகத்துடன் அயலவருடன், உற்றார் உறவினருடன் அன்பும், பண்பும் அறநெறி பிறழாத பெருந்தன்மையுடன் பழகியவர். எல்லோர் மனத்திலும் பெருமதிப்புப் பெற்றவர். ஆனால் எல்லோருக்கும் நல்லவர் என்ற இனிய வாசகத்திற்கு இலக்கியமாக இறுதிவரை இன்பமாக இருந்து இறைவனடி சேர்ந்துவிட்டார்.

சென்றவருக்கு நிம்மதி, ஆனால் இங்கு இருப்பவர்களுக்கு பெருங்கவலை. பிறந்தவர் அனைவரும் உரியகாலம் வரும் வேளை மறைவு உறுதி என்னும் முதுமொழிக்கு இணங்க அன்னாரின் புனித ஆத்மாவை நன்கு மதிப்போம். அவருக்குச் செய்யவேண்டிய ஆன்ம ஈடேற்றக் கிரியைகளை முறையாகச் செய்து அவரது ஆசியுடன் அவர் வழி வாழ்வதே சிறந்த கடமையாகும். உங்களின் ஆத்ம சாந்திக்காக எங்கள் குடும்பத்தின் சார்பாக இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

"தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும்"

பேராசிரியர் இராமநாதன் சாந்தன் J.P
வடமாகாண நிர்வாகப் பணிப்பாளர்,
இலங்கை மனித உரிமைகள் அமைப்பு,
பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை -இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சுப்பிரமணியம் இரத்தினசிங்கம் அவர்கள்

*திருச் சிற்றம்பலம்*

ஆலம் தான் உகந்து அமுது செய்தானை
ஆதியை அமரர் தொழுது ஏத்தும்
சீலம்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பார் அவர் சிந்தை உளானை
ஏலவார் குழலாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற
கால காலனைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாயே.

*திருச் சிற்றம்பலம்*

ஈழத்திருநாடு திருமூலர் அவர்களால் சிவபூமி எனப்பட்டது. குறிப்பாக யாழ்ப்பாணம் சைவ ஆலயங்கள் நிறைந்த பூமி. இந்த சிவபூமியில் தோன்றிய வர்தான் அமரர் இரத்தினசிங்கம் அவர்கள். தந்தையாரைப் போலவே அமரர் அவர்களும் நிறைந்த சிவபக்தி உள்ளவர். இனிமையான பேச்சு மூலம் பிறரைக் கவர்ந்தவர். பிறரை நேசித்த பெருந்தகை. இந்த சிவபூமியில் நிறைவாழ்வு வாழ்ந்த பெரியார்.

கட்டடக் கலைஞராக (Architect) பட்டம் பெற்று பல்வேறு கட்டடங்களை நிர்மாணித்தவர். குறிப்பாக கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகரின் தேர்முட்டியை அழகுற ஆக்கித் தந்தவர். இந்த தேர்முட்டி அவரது கட்டடக் கலையை என்றும் பறைசாற்றி நிற்கும். வதரிபீட உற்சவங்களில் அமரர் குடும்பத்திற்கு பெரும் பங்கு உண்டு என்று துணிந்து கூறலாம்.

சுவாமி விவேகானந்தர் கூறியது போல் "நன்மை செய்யப் பிறந்த நீ. எவருக்கும் தீங்கு செய்யாது இரு" என்னும் கோட்பாட்டை இறுதிக்காலம் வரை கடைப்பிடித்து ஒழுகி வாழ்ந்தவர். சமாதான நீதவானாக மக்களுக்குப் பெரும் சேவை ஆற்றிய தீபம் மறைந்தாலும் மறையாமல் இருக்கிறது அவரது குடும்பம். அமரர் இரத்தினசிங்கத்தின் ஆத்மா அமைதி பெற சிவபரம்பொருளை இறைஞ்சுவோமாக!

சிவாயநம ஓம்

பொ.சிவப்பிரகாசம்
Retd. Chief Public Health Inspector
கொழும்புத்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவைக்கு இலக்கணமாய் வாழ்ந்தவர்
## மனிதனுள் இரத்தினசிங்கமானவர்

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்"**

என்ற பொய்யாமொழிப் புலவன் வள்ளுவனின் வாக்கிற்கமைவாக வையத்துள் வாழ்ந்து அமரராகிவிட்ட சுப்பிரமணியம் இரத்தினசிங்கம் அவர்களின் நினைவலைகள் எம் மனங்களில் என்றும் எழுந்த வண்ணமே உள்ளன. எப்போதும் புன்முறுவல் பூத்த முகமும் மற்றவர்களைப் புண்படுத்தாத கனிவான பேச்சும் ஏனையோருக்கு உதவும் மனப்பாங்கும் கொண்ட உயர் பண்புகள் யாவும் ஒருங்கே அமையப்பெற்ற அமரரின் மறைவு பேரிழப்பாகும்.

அமரர் அவர்கள் எனது அன்புக்கும், பெருமதிப்புக்கும் உரியவர்களின் வரிசையில் முதன்நிலையில் உள்ளவராவர். கடந்த பல ஆண்டுகளிற்கு மேலாக அமரரை நான் அறிவேன். அன்பு, அடக்கம், இன்சொல் என்பவற்றைத் தன்னகத்தே கொண்டு செயற்பட்டவர். கடமைக்கு முக்கியத்துவம் கொடுத்து ஏனைய செயல்களில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டவர். மிகப் பெரிய சோதனை களைத் தாண்டினாலும் அதனை மார்தட்டிப் பெருமை பேசாதவர். எந்தவொரு செயலினையும் நிதானத்துடன் ஆற்றும் வல்லமை கொண்டவர். எத்தகைய உதவியை எவர் கேட்டாலும் மறுப்பின்றி ஆற்றும் பண்புள்ளவர். தேவைப்படும் நேரங்களில் பொருத்தமான வழிகாட்டலைக் கொண்டு செயற்படுபவர். இவரது வழிகாட்டலில் இன்றும் தொழில்நுட்பவியலாளராகக் கடமையாற்றிக் கொண்டு இருப்பவர் பலர்.

இவர் நோய்வாய்ப்பட்டிருந்த இறுதி நேரத்தில் எனது நண்பரும், யாழ். மாநகர சபையில் தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றிக் கொண்டிருப் பவருமான திரு.எஸ்.சிவயோகராஜா என்பவரிடம் நான் நோய்வாய்ப்பட்டிருப்பது தம்பி பிரதாபனுக்குத் தெரியாதா?" என வினவியுள்ளார் என்பதனை இவர் மரணித்த செய்தியோடு எனது நண்பர் மிகவும் வேதனையோடு கூறியிருந்தார். நேரத்தோடு எனக்கு அறியத் தந்திருப்பாராயின் நான் அவரைப் பார்த்து சம்பாசனை செய்திருந்தால் அவரும் ஆறுதல் அடைந்திருப்பார். நானும் அறுதல் அடைந்திருக்கலாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே நேரத்தில் இவரது மருமகனான (மகன்) Dr.ஜீவகன், யாழ். போதனா வைத்தியசாலையில் 7ஆம் வாட்டின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிக் கொண்டு இருக்கும் போது, ஐயாவுடன் ஒருநாள் சம்பாசனையில் நான் 7ஆம் வாட்டு நோயாளி எனக் கூறினேன். அப்போது ஐயா "எனது மருமகன் ஜீவா தான் 7ஆம் வாட்டு பொறுப்பதிகாரி எனக் கூறி எனக்கு இருதய சத்திர சிகிச்சை நடைபெறும் வரை அவரது கண்காணிப்பின் கீழே என்னை வைத்திருந்தார். Dr.ஜீவாவும் வைத்தியசாலையிலும் சரி வீட்டிலும் சரி என்னைக் கண்டவுடன் முன்னுரிமை தந்து கண்காணித்து வந்தார். ஐயாவின் இறுதிக்கிரியையில் நான் கலந்து கொண்ட போது Dr.ஜீவா "அங்கிள், மாமா அடிக்கடி கூறுவார் , "தம்பி பிரதாபனைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கூறித் தனது மாமனாரின் பிரிவை மிக வேதனையோடு என்னுடன் பகிர்ந்து கொண்டார்.

இவ்வாறாக அன்னாரைப் பற்றிக் கூறினால், கூறிக்கொண்டே போகலாம். அமரரின் மறைவால் துயர்மிகுந்து காணப்படும் மனையாள், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள் துயரிலிருந்து மீட்சிபெறவும் அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஒய்வுநிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்
திரு. திருஞானலிங்கம் பிரதாபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Late Mr.S.Ratnasingam -Gentlemen Par - Excellence

I had the great privillege of associating with the late Mr.S.Ratnasingam for the past two decades. Within this period, I found him to be a gentle genial down to earth person with exemplary qualities.

The late Mr. Ratnasingam had his education at St. John's college, Jaffna where he shone as a very bright scholar. He took part in all most all the extracurricular activities of the school, and won the accolades of the principal and teachers who taught him. After leaving School he obtained his diploma in draughtsman ship at the Moratuwa campus. He served as a lecturer and an architect at various institutions including the state Engineering co-operation for a lengthy period. Thereafter, he started his own business concern and was a much sought after architect in Jaffna.

He was a deeply religious man and was a devout Hindu and his entire family were devotees of the Colombuthurai Narasima Gana Vairavar Temple. He was made a Justice of peace (whole island) and served the community in which he lived with distinction. I am sure his soul will rest in peace at the feet of lord Shiva.

After all life is a gift from god which has to be gifted back to him before we reach that heavenly aborde.

***Mr.J.Muthukumarasamy***
***Chundikuli.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் சுப்பிரமணியம் இரத்தினசிங்கம் அவர்கள் ஒரு 'காலச்சுவடு' ஆவார்

1979 ஆம் ஆண்டு ஆவணி மாதம் ஒரு சனிக்கிழமை காலை ஒன்பது மணியளவில், தனது பணியின் நிமித்தம் யாழ்.ஸ்ரான்லி ரோட்டில் அமைந்திருந்த பட்டப்படிப்புக்கள் கல்லூரியில் அமரர் சுப்பிரமணியம் இரத்தினசிங்கம் அவர்களை முதன் முதலில் சந்தித்தேன். அக்காணியின் உரிமையாளருடன் வகுப்பறையில் ஒரு அரச ஊழிய மாணவரைச் சந்திப்பதற்காக வந்திருந்தார். மிடுக்கான தோற்றமும் நேர்கொண்ட பார்வையுமாகி புன்சிரிப்புடன் நின்றிருந்தார். அன்றுதொட்டு அண்மைக்காலம் வரை அவருடன் நட்புறவு கொண்டவன், அதனால் அவரோடு பழகிய, வாய்ப்பை மீட்டுப் பார்ப்பதில் பெருமித மடைகின்றேன்.

திருமண பந்தத்தால் சுண்டுக்குளியில் குடியமர்ந்த காலத்தில் ஒருநாள் பாண்டியன்தாழ்வு நரசிம்ம வைரவர் ஆலயச் சுற்றாடலைத் துப்பரவு செய்து கொண்டிருந்த அவரின் தந்தையார் அமரர் சுப்பிரமணியம் ஐயா அவர்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்ததோடு இக்கிராமத்திற்கு குடிமகனாக வந்தமைக் காகத் தன் மகிழ்ச்சியை நட்புறவோடு பகிர்ந்து கொண்டார்.

அமரருடைய மகன் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் உயர்தர வகுப்பு மாணவ ராகக் கல்வி பயின்ற காலத்தில் நான் அவரின் வகுப்பு- பாட ஆசிரியராகக் கற்பித்த போது பெற்றோர் என்ற வகையில் என்னோடு கௌரவமான தொடர்பை வைத்திருந்தார். அவர்களின் கல்வி முன்னேற்றத்தில் அதிக ஆர்வம் காட்டினார். "கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்ற ஔவையின் வாக்குக்குச் சான்றாக மிளிர்ந்தார்.

நமது காலத்தில் நடந்து முடிந்த விடுதலைப் போராட்ட வரலாற்றோடு, அதன் இன்ப துன்பங்களோடு, நன்மை தீமைகளோடு உளமொன்றித்தவர். அதனால் அவ்வரலாற்று முயற்சிகளை ஊகித்துணர்ந்து துணிவாக விமர்சித்தவர். அதனால் ஏற்பட்ட இழப்புக்களின் வலியை ஒரு புறம் சுமந்து வாழ்ந்தவர். அதைப் பகிர்ந்து கொண்டு சமாதானமடைய,புரிந்துணர்வு கொண்ட நல்ல உள்ளங்களைத் தேடியவர். அவருடைய சமாதான நீதவான் என்ற சமூகப்பணியும் அதில் காட்டிய நேர்மையும் கடமையுணர்வும் பல அமைப்புக்களால் பாராட்டப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் இன்று இழந்து வருகின்ற மறந்து வாழ்கின்ற இக்கால இளஞ் சந்ததியினர் அறிந்துகொள்ள வேண்டிய முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டிய பல பண்புகளுக்குரிய 'காலச் சுவடாகத்' திகழ்ந்தவர். தூய்மையான உடை, மிடுக்கான நடை, நேர்கொண்ட பார்வை புன்சிரிப்பு வெளிப்படையாக நல்லதை தீயதைத் துணிந்து சுட்டிக்காட்டும் துணிபு, பழுத்த அனுபவம் அறிவு சாதாரணமான மொழியாற்றல் என ஒரு மரபுப் பெட்டகமாக வாழ்ந்தவர்.

அதனால்தான் இறைபக்தியுடைய குடும்பத் தலைவராக, நெறிகாட்டும் தந்தையாக, பண்புடைய அயலவராக, சமூக சேவையாளராக பல்வேறு சமூக அமைப்புக்களோடு தொடர்பு கொண்ட நல்ல மனிதனாக அவரின் காலச் சுவட்டை மீட்டுப்பார்க்க முடிகிறது.

அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் நாங்களும் பங்குகொண்டு, பிரிவால் துயருற்றிருக்கும் அவர்தம் பாரியார், பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகள் உற்றார்,உறவினர்களோடு இணைந்து இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*கலாநிதி யுகபாலசிங்கம் குடும்பத்தினர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பனின் பிரிவாற்றாமை

யாழ்ப்பாணம் பாண்டியன்தாழ்வைப் பிறப்பிடமாகவும், வாழ்விடமாகவும் கொண்டிருந்த இரத்தினசிங்கம் அவர்கள் இறைவன் திருவடி சேர்ந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் இரத்தினம் தம்பதியரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்ற இளையதம்பி கண்ணம்மா தம்பதியரின் மருமகனும், ஓய்வுபெற்ற ஆசிரியை மல்லிகா அவர்களின் அன்புக் கணவனுமாவார்.

எண்பத்தொரு ஆண்டுகளுக்கு மேல் இப்புவியில் இனிதே வாழ்ந்து இறைபதம் அடைந்த இரத்தினசிங்கம் அவர்கள் தயாபரன், (லண்டன்), அமரர் கிரிதரன், சத்தியவாணி(கனடா) Dr.சுதர்ஷனி (யாழ்ப்பாணம்), சாயினி(லண்டன்), சஞ்ஜீவன் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுதர்மா (லண்டன்), சற்குணராசா (கனடா)Dr.ஜீவகன் (யாழ்ப்பாணம்), நீலகரன் (லண்டன்), சங்கீதா(யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சக்திகிரீவன்(கனடா), கவிநயா(யாழ்ப்பாணம்), கிரிஷிகேசன்(யாழ்ப்பாணம்), சுவேதா(லண்டன்), சேயோன்(லண்டன்) மற்றும் யாழ்ப்பாணத்தில் வதியும் சக்திவிதூசன், சயனா, லக்ஷனா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியின் பழைய மாணவரான இவர் தொழில்நுட்பத் துறையின் தகைமை பெற்றவராவார். 1955 முதல் 1960 வரையான காலப்பகுதியில் கொழும்பு துரைராஜா அசோசியேட் நிறுவனத்தில் படவரைஞர் பயிற்சியாளராகக் கடமையாற்றினார். பின்னர் 1960 முதல் 1961 வரை மொரட்டுவ கட்டுப்பெத்த வளாகத்தில் படவரைஞர் டிப்ளோமா பட்டப்பின் படிப்பையும் 1961 -1964 வரை அதே வளாகத்தில் கட்டடக் கலைஞர் பட்டப்பின் படிப்பையும் மேற்கொண்டார்.

கொழும்பு பௌத்த பல்கலைக்கழகக் கல்லூரியின் படவரைஞர் மற்றும் கட்டட நிர்மாணம் தொடர்பான பகுதிநேர விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

அத்துடன் இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் விசேட தர படவரைஞராக 1964 - 1979 வரை கடமையாற்றியதுடன், யாழ்ப்பாண தொழில்நுட்ப நிறுவனத்தில் 1978 முதல் 1990 வரை பகுதிநேரப் பணியாளராகவும் பணிபுரிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980 - 1985 வரையான காலப்பகுதியில் இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் படவரைவு அலுவலக உதவியாளராகவும் பணியாற்றினார்.

1986 -1992 வரையான காலப்பகுதியில் கொழும்பு சமரசிங்க நிர்மாண கட்டட ஆர்கிடெக்ட் நிறுவனத்தில் உருவமைப்பு அலுவலராகவும் கடமைபுரிந்தார்.

1993 முதல் "வீ பில்ட்" கட்டட ஆலோசனை நிறுவனத்தையும் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நடத்திச் சென்றார்.

சமூகநலனில் ஆர்வம் காட்டிச் செயற்பட்ட இரத்தினசிங்கம் அவர்கள் இலங்கையிலுள்ள இந்துசமய நிறுவனங்களின் கூட்டமைப்பான அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பேராளராக அனைத்திலங்கை இந்து வாலிபர் சங்கத்தின் பிரதிநிதியாகவும் நீண்டகாலம் செயற்பட்டதுடன் மாமன்றத்தின் கட்டடக் குழுவின் செயலாளராகவும் பல ஆண்டுகள் தன் பணியை ஆற்றியுள்ளார்.

*த. மனோகரன்,*
*அகில இலங்கை இந்து மாமன்ற துணைத் தலைவர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## It was a shock to hear that my Guru / Advisor Mr.S.Ratnasingm passed away

I came to know him in 1964 when I joined the buddhist University College to follow draughtsman course . He was our Lecturer for the draughtsman course. If no happened that there were only my self and another student called Ariff who followed this course. After One week of lecturing he advised us to join a chartered architect and be an understudy five years which will be very helpful for our furture. He did not care about loosing his job if we discontinue the course, but he gave us this advice becaus he had a liking towards us.

from that day we have been in contact frequently and he was very happy that we came up in life.

Actually if not for my guru I would not be in this position in my life. last November 2015 he gave me a call and asked how I was and where am I I told him that I was in bed at the Kalubovilla hospital for a surgery. He was shocked and he immediatly said to revert to Ayurvedic medicins and send me some medicial leaves to Trincomalee and alway in contact about my progress.

also he sent Shiridi baba's Uthi to be taken by me and by gods grace and my guru's love and liking toward me. I recovered but he joind the all mighty. I am yet to see a very soft spoken helpful love able person in my life.

I miss him.

May his soul rest in peace

***A.Jayaratnam***
***Managing Trust***
***Viloondy Kandasamy Kovil***
***Trincomalee.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மதுரை மீனாட்சி அம்மன் துணை

**சிறி நதியா நகை மாளிகை**

தங்கப்பவுண் நகை வியாபாரம்

**Sree Nathiya Nakai Maaligai**

*Manufacturers Of Gold Jewels*



No.01, Kasthuriar Road, Jaffna.
(Kasthuriar Road, Stanley Road Junction)

T.P - 021 222 2709

01

இல.01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதி சந்தி)


## எம் இதயத்தில் குடிகொண்ட ஐயா...

அமரர் சுப்பிரமணியம் இரத்தினசிங்கம் அவர்கள் சிவபதமடைந்து எம் மனதில் என்றுமே அழியாத நினைவுகளாகி விட்டது.

சிரித்த முகமும் கனிவான பேச்சும். கருணை உள்ளம் இவை அனைத் தினதும் உறைவிடம் தான் அமரர் சுப்பிரமணியம் இரத்தினசிங்கம் அவர்கள். சமுதாயத்தில் பெருமதிப்புக்கும் மரியாதைக்குமுரியவர். உதவிபுரிவதில் உத்தமர். கடமையே கண்ணெனக் கொண்டவர். அயராத உழைப்பும் அன்புள்ளமும் சமுதாயத்தில் அவருக்கென்று தனி இடத்தைக் கொடுத்தது. நேரகாலம் பார்க்காது எமக்கு மட்டுமல்ல தன்னை நாடிவரும் எல்லோருக்கும் வழிகாட்டிய வல்லமை கொண்ட மாமனிதர். இக்கட்டான காலகட்டத்தில் இடர் நீக்கிய இனியவர். வாழ்வாங்கு வாழ்ந்து வையகத்தை விட்டகன்ற அமரர் அவர்களின் இழப்பு என்றுமே ஈடு செய்ய முடியாததொன்று. அன்னாரின் நினைவுகள் என்றும் எம் நெஞ்சங்களில் நிலையாய் நிறைந்து இருக்கும் இந்த மாமனிதரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவரின் பிரிவால் துன்புற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*ந. சத்தியரூபன்*
*சிறிநதியா நகை மாளிகை,*
*நடராசா பரமேஸ்வரி மணிமண்டபம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09 - 02 - 1935 | 28 - 09 - 2016 |

எமது ஆலய நிர்வாகசபையின் முன்னாள் போஷகர்
அமரர்
**சுப்பிரமணியம் இரட்ணசிங்கம் அவர்கள்**

கண்கள் பல உன்னைத் தேட

காணாமல் காலனுடன் சென்றதேனோ

கள்ளமில்லா வெள்ளை மனமும்

புன்னகை பூத்த பொன்முகமும் மறைந்ததேனோ

கண்களெல்லாம் கண்ணீர் பொங்க

கலங்கவிட்டு எங்கு சென்றீர்

அமைதியாய் மரணத்திரையில்

மௌனமாய் மறைந்ததேனோ

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நிர்வாகசபை
அருள்மிகு ஸ்ரீ நரசிம்ம வைரவர் ஆலயம்
பாண்டியந்தாழ்வு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு

09

02

1935



இறப்பு

28

09

2016

அமரர்

## சுப்பிரமணியம் இரத்தினசிங்கம்

அன்பாலும் பண்பாலும் அனைவரையும் அரவணைத்து
சிறப்பாக வாழவைத்த அணையா ஒளிவிளக்கே
உங்கள் பசுமையான நினைவலைகள்
எமைவிட்டு அகலாது காலன்
உமைக் கவர்ந்து சென்றாலும்
கனவிலும் நினைவிலும்
தங்கள் பிரிவால் துயருறுகின்றோம்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*AMT Transport Service*
*AMT Marketing & Distributors(pvt) LTD - NESTLE*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்க் காணிக்கை



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 09 — 02 — 1935 | 28 — 09 — 2016 |

எமது வைத்திய அதிகாரி Dr.ஜீ.சுதர்சனி அவர்களின் அன்புத் தந்தையார்

## அமரர் சுப்பிரமணியம் இரத்தினசிங்கம்

ஒன்றாகக் கலந்துவிட்ட செய்தி –எம் நெஞ்சை
இரண்டாகப் பிளந்து அதில் வேலைப் பாய்ச்சியது
நான்கு திசைகளிலும் தேடியும்மை
ஆறாத் துயரினிலே அமிழ்ந்து போனோம்
எட்டாத தூரம் நீர் ஏகிவிட்டீர்!
இனி எம்மால் முடியாதோ உம்மைக் காண!

அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
பிரதேச வைத்தியசாலை,
உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள்.
குருநகர், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்ப் பூக்களைக்
# காணிக்கை ஆக்குகின்றோம்

மண் மகிழ
09
.
02
.
1935



கண் நெகிழ
28
.
09
.
2016

கொழும்பு தேசியவைத்தியசாலை , வைத்தியர் ப. ஜீவகன் அவர்களது
அன்பு மாமனாரும் , குருநகர் பிரதேச வைத்தியசாலை வைத்தியர்
ஜீ.சுதர்சினி அவர்களது அன்புத் தந்தையாரும் ஆகிய
பாண்டியன் தாழ்வு கண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர். சுப்பிரமணியம் இரத்தினசிங்கம்

(இ) னிய தமிழ்மகனாய் இன்பங்கள் பொங்க வாழ்ந்தவரே!
(ர) த்தினமாய் விளங்கிடும் பிள்ளைகளின் சொத்தாக இருந்தவரே!
வி(த்) தகராய் உம்பணிதனில் புகழோடு முழுமை பெற்றவரே!
(தி) சையெல்லாம் பெருமை மிகு முத்தான பிள்ளைகளுக்கு நல்வழி காட்டியவரே
ம (ன) ம் விரும்பிய மனைவியின் தூய்மையான துணைவராய் புனிதரானவரே!
(சி) றந்தவரை இழந்துள்ளம் உருகி இங்கே உறவுகள் வாடுதையா!
உ(ங்) களின் பேரன்புப் பேரப்பிள்ளைகள் பெருந்துயரோடு ஏங்குதையா!
(க) ண்ணான பொன்னான பெருமகனாரை எண்ணிக் கண்ணீர்ப்பூக்கள் சிந்துகின்றோம்
எ (ம்) ஐயாவே எம்மோடு வாழ எப்போது மீண்டு(ம்) வாருவீரோ?

அன்னாரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!!

பிரியாத்துயரங்களோடு.....
வேலுப்பிள்ளை அன்பழகன்
குடும்பத்தினர்

அன்பொளி கல்வியகம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்க சில நிமிடம்

- மனித வாழ்வில் மாற்றங்கள் இயல்பானது
- நல்ல இதயம் இறைவனின் சரணாலயம்
- கல்வியின் பயன் அறிவும் பணிவுமாகும்
- புனிதமான செயல்களால் வருவதே புகழ்
- இறைவன் ஒருவனே அவனுக்குப் பலபெயர்கள்
- மனிதன் கடவுளுக்கு ஏற்றவனாய் வாழுதல் வேண்டும்
- அகங்காரத்தை விட்டவனுக்குத் துன்பம் இல்லை
- சத்தியம் ஒன்று அதனை ஆராதனை செய்யும் வழிகள் பல
- கபடமற்ற தர்மமே துணை புரியும்
- அன்புடையார் இன்புற்று வாழ்தல் இயல்பு
- உண்மை கனமானது ஆகவே அதைச் சுமப்பவர்கள் சிலரே
- வாய்மையே மன இருளைப் போக்கும் மாசற்ற விளக்கு
- மனிதர்களுக்கு நல்ல அணிகல் பொறுமை
- நாவுக்கு அழகு இன்சொல்
- பண்பு அமைவது ஒருவருடைய இளமையிலே
- நல்ல மனச்சாட்சிதான் கடவுளின் குரல்
- காரியத்தில் உறுதியாக இருப்பதுதான் வெற்றியின் ரகசியம்
- அதிகாரத்தை விரும்பிச் சுதந்திரத்தை இழக்காதே
- வார்த்தைகள் இதயத்திலிருந்து வரவேண்டும்
- அன்பு செலுத்துவது தெய்வத்தின் பண்பு
- பேச்சைவிடச் சிந்தனை ஆழமானது
- அன்பு எதையும் பொறுத்துக் கொள்கிறது
- மன்னிப்பது மனித இயல்பு
- நற்செயல்களையே நாள்தோறும் செய்க
- இறைவனின் குணம் கருணை
- அன்பைவிட வலிய சக்தி உலகில் எங்கும் இல்லை
- மனதில் உறுதியிருந்தால் பாம்பின் விஷம்கூட சக்தியற்றதாகிவிடும்
- தானம் என்பது பிரதிபலன் கருதாத கொடை
- உரிமைகளின் உண்மையான மூலம் கடமைதான்
- துன்பம் எமக்கொரு மௌன ஆசிரியன்
- நாக்கானது கத்தியைக் காட்டிலும் ஆழமாகப் பாயும்
- பொதுவாக எல்லோரும் சந்திக்கும் இடம் சமாதிதான்
- அன்பையும் வாசனையையும் மறைக்கமுடியாது
- நல்ல நம்பிக்கை என்பது உண்மையின் மறுபிறப்பு
- நீ மற்றவர்களைக் கண்டு பயப்படாதே
- நூல்களைப் படிப்பதை நிறுத்தக்கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் மேம்பட

குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சர மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்க.


- நானே பெரியவன். நானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள். (Ego)
- அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக்கொண்டேயிருப் பதை விடுங்கள். (Loose Talk)
- எந்த விஷயத்தையும் பிரச்சினையையும் நாசுக்காகக் கையாளுங்கள் (Diplomacy) விட்டுக்கொடுங்கள். (Compromise)
- சிலநேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துத்தான் ஆகவேண்டும் என்பதை உணருங்கள்.
- எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்குச் சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.
- உங்கள் கருத்துகளில் உடும்புப்பிடியாய் இல்லாமல், கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள். (Flexibillty)
- மற்றவர்களுக்குரிய மரியாதையைக் காட்டவும் இனிய இதமான சொற் களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள். (Courtesy)
- புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்புச் சொற்களைச் சொல்லவும் கூட நேரமிலாது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
- பிரச்சினைகள் ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவங்க முன்வாருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவெழா நிலையில்
# நன்றி நவில்கின்றோம்


"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந் நன்றி கொன்ற மகற்கு"



எங்களுடன் அன்பாகவும் ஆதரவாகவும் நடந்த
எமது அன்புத் தெய்வம்
**அமரர் சுப்பிரமணியம் இரத்தினசிங்கம்**

அவர்களின் துயரச் செய்தி அறிந்ததும் உடன் வந்துதவிய உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தூரத்தில் இருந்தும்நேரில் வந்தும் தொலைபேசிமூலமும், அனுதாபம்தெரிவித்த அன்பு நெஞ்சங்களுக்கும், மலர்கள், மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செய்தவர்களுக்கும், பதாதைகள் கண்ணர்அஞ்சலிப்பிரசுரங்கள் மூலம் தங்கள் அனுதாபங் களைத் தெரிவித்தவர்களுக்கும்,இறுதிக் கிரியை களின்போதும் இறுதி யாத்திரையிலும்கலந்து கொண்டவர்களுக்கும் அந்தியேட்டி நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற ஒத்துழைத்தவர்களுக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் இம்மலரை சிறந்த முறையில் அச்சிட்டு உதவிய அன்ரா பிறிண்டேர்ஸ் (யாழ்ப்பாணம்) நிறுவனத்தாருக்கும் இவ் உலகின் ஆதியும் அந்தமுமாக விளங்கும் அந்தப் பரம்பொருளின் திருவடிகளை சிரமேற் சூடி அனைவருக்கும் உளமொழி மெய்களால் நன்றி செலுத்துகின்றோம்.

நன்றி




**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வம்சாவழி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் சாய் ராம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்? அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்."
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின்
சாராம்சமுமாகும்.



ANDRA Printers, Jaffna - 021 221 7279

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org